பக்கங்கள்: 13

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 17 திங்கட்கிழமை 02.11.2020 கதிர் 358

## இனி இது ரகசியம் அல்ல!

சிலருக்கு சில பண்பியல்புகள் மாற்ற முடியாதவையாக இருக்கும். அதை நான் சிலேடையாக 'பரவணிப் பண்பியல்பு' அல்லது பழக்க வழக்கம் என்று குறிப்பிடுவதுண்டு. அத்தகைய போக்கு புரிந்து கொள்ளத் தக்கதே. ஆனால் வேண்டு பக்கம் 02 »

## 11 ஆயிரத்தைக் கடந்தது 'கொரோனா' நேற்றும் 397 பேருக்குத் தொற்று உறுதி

இலங்கையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 11 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

நேற்று மாத்திரம் 397 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சமூகத்தில் இருந்த 356 பேருக்கும், தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்த 41 பேருக்குமே நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 60 ஆக உயர்வடைந்துள்ளது. வைத்திய பக்கம் 02 »

## 21ஆக உயர்ந்தது கொரோனா சாவு



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்தஎண்ணிக்கை 21 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மஹர பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுவாசப் பிரச்சினை மற்றும் இரத்த அழுத்த நோய்களினால் பாதிக்கப்பட்ட அவர் கடந்த மாதம் 23ஆம் திகதி வெலிசறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

ஆரம்பத்தில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி பக்கம் 02 »

## இலங்கையில் கொரோனா உச்சம்

# மாவட்டங்களுக்கு இடையே போக்குவரத்துக்குத் தடை!

### அதிரடியாகப் பல கட்டுப்பாடுகளை அறிவித்தார் கோட்டா




- ★ ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரங்களை வழங்க வேண்டாம் எனப் பொலிஸாருக்கு உத்தரவு.
- ★ வீடுகளில் மேற்கொள்ளப்படும் தனிமைப்படுத்தல் கண்காணிப்பு.
- ★ தனிமைப்படுத்தலுக்கு 10 நாள்களின் பின்னர் பி.சி.ஆர். பரிசோதனை.
- ★ வீடுகளில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள்.
- ★ ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள பிரதேசங்களுக்கு முன்பிருந்த முறைமையின் கீழ் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கம் உச்சம் அடைந்துள்ளதையடுத்து மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம் மற்றும் ஏனைய அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகளுக்காக மாவட்டங்களை விட்டு வெளியேற முடியாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். பக்கம் 02 »

## மேல் மாகாணத்தில் ஊரடங்கு அடுத்த திங்கள் வரை நீடிப்பு!



மேல் மாகாணத்தில் அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி காலை 5 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, குருநாகல் மாவட்டத்தில் குளியாப்பிட்டிய பொலிஸ் பிரிவில் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்கும் நீடிக்கப்பட்டுள்ளது. பக்கம் 02 »

## நாட்டை முடக்காமல் மக்களை சாகடிக்க முயல்கின்றது அரசு

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொரோனா வைரஸ் என்ற கொடிய நோய் இன்று சமூகத்துக்குள் ஊடுருவி பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது. ஆனால், அரசோ நாட்டை முழுமையாக முடக்காமல் மௌனம் காக்கின்றது. இந்நிலையில், மக்களை அமைதியாகச் சாகடிக்க அரசு முயல்கின்றதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தற்போது இரக்க குணமே இல்லை பக்கம் 02 »

## கோப்பாய் கல்வியியற் கல்லூரி இன்று முதல் கொரோனா சிகிச்சை நிலையமாக இயங்கும்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி இன்று முதல் கொரோனா சிகிச்சை நிலையமாக இயங்கவுள்ளது என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று பக்கம் 02 »

## மேல் மாகாணத்தில் ஊரடங்கை இப்போதைக்கு நீக்க வேண்டாம்

### பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்து

மேல் மாகாணத்தில் ஊரடங்கு உத்தரவை இப்போதைக்கு நீக்குவது உகந்த விடயமில்லை எனப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோகண இதனைத் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் தற்போது நடைமுறையிலுள்ள ஊரடங்குச் சட்டத்தை நீக்குவதால் ஏனைய பக்கம் 02 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மென்றே தவறிழைப்பதைப் பரவணிப் பண்பியல்பு என்று கூறித் தப்பி விட முடியாது.

'படிப்பது தேவாரம், இடிப்பது சிவன் கோவில்' என்பார்கள். அது போல பேசு வதோ தமிழ்த் தேசியம். ஆனால் செய் வதோ தமிழ்த் தேசிய விரோத சக்திகளை நிலைநிறுத்தும் வேலைகளை.

இப்படி ஒரு கட்சி – அல்லது தரப்பு –நம் மத்தியில் செயற்பட்டால் அதை என்ன வென்று? அதையே பரவணிப் பழக்கம் போல முன்னெடுத்தால் என்ன செய்வது?

இந்தப் பூடகமான தகவல்களோடு இனி விடயத்துக்கு வருகிறேன். இது, கர வெட்டி பிரதேச சபை தொடர்பாகக் கடந்த சில தினங்களாக நான் எழுதி வரும் விட யம் சம்பந்தமானது தான்.

கரவெட்டி, பிரதேச சபையில் முப்பத்தி யொரு உறுப்பினர்கள். அதிகாரத்தை வைத்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கு (அல்லது தமிழரசுக் கட்சிக்கு) அதில் ஒன்பது இடங்கள்தாம்.

ஏழு இடங்களை தமிழ்த் தேசிய மக் கள் முன்னணியும், ஏழு இடங்களை சிறி லங்கா சுதந்திரக் கட்சியும் வைத்துள்ளன.

இந்த முறை வரவு – செலவுத்திட்டம் தோற்கடிக்கப்படுமானால் தற்போது இருக்கும் கூட்டமைப்பின் தவிசாளர் ஐங் கரன் பதவி இழப்பார். மீண்டும் புதிய தவி சாளர் தெரிவு நடைபெறும்.

2018 இல் முதல் தெரிவின் போது ஐங்கரன் ஆக ஒரு வாக்கினால்தான் தவிசாளர் பதவியைப் பிடித்தார்.

அவரை எதிர்த்துக் களத்தில் நின்றவர் யாழ்.மாவட்ட எம்.பி. அங்கஜனின் தந் தையார் இராமநாதன். அவர் தமிழ்த் தேசி யம் பேசும் கட்சியைச் சேர்ந்தவரல்லர். சிங்களக் கட்சியின் யாழ்.பிரதிநிதி.

தமது கட்சியின் கட்டுப்பாட்டில் – தனது தலைமையில் – அந்தப் பிரதேச சபை யைக் கொண்டு வருவதற்கு அவர் துடி யாய்த் துடிக்கின்றார் என்றும் –

அதற்காக சாம,பேத,தான,தண்டம் என எல்லா வழி வகைகளையும் நாடுவார் என்றும் –

ஏற்கனவே இப்பத்தியில் விவரித்தி ருந்தேன். இருபதாவது திருத்தத்துக்கு எதிரணியில் இருந்து எண்மர் எப்படி அந் தர்பல்டி அடித்தனரோ, அதுபோல கரவெட் டிப் பிரதேச சபையையும் அந்தர்பல்டி மூலம் கைப்பற்றத் தருணம் பார்த்துக் காத்திருக்கின்றார் இராமநாதன். அதற் காக எவ்வளவும் கைமாறலாம்.

இருக்கும் தவிசாளரைக் கவிழ்த்து, புதிய தவிசாளர் தெரிவு நடைபெறுமாக இருந்தால், தமிழ்த் தேசியம் பேசும் தரப் புகளின் கைகளில் இருந்து சிங்களக் கட்சி யின் கைகளுக்கு அது மாறுவதை தமிழ ரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவி னாலோ அல்லது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகு மார் பொன்னம்பலத்தினாலோ மறித்துப் பிடிக்க முடியாது என்பது தெளிவு.

ஏற்கனவே தலைவர் பிரபாகரன் பிறந்த ஊரில் சுதந்திரக் கட்சிக்கு 'ஆரத்தி' எடுக் கும் வாக்களிப்பை அங்கு காட்டி நிற்கின் றது நம் சமூகம். இந்தச் சீத்துவத்தில் கரவெட்டி பிரதேச சபையையும் அத்தரப் புக்கு தாரை வார்க்கும் 'சதி' வேலையைத் தமிழ்த் தேசியம் என்று 'நாடகம்' போடும் தரப்பு ஆரம்பித்திருப்பதாகத் தெரிகின்றது.

கரவெட்டி பிரதேச சபையின் தவிசா ளர் இம்முறை சமர்ப்பிக்கும் வரவு – செல வுத் திட்டத்தைத் தோற்கடித்தால், அதன் விளைவு புதிய தவிசாளராக அங்கஜனின் தந்தையார் இராமநாதனை நியமிப்பதற் குக் கட்டியம் கூறும் நடவடிக்கைதான். அது உறுதியானது.

அது தெரிந்து கொண்டும் அந்த நட வடிக்கைக்கு கஜேந்திரகுமார் – கஜேந்தி ரன் தலைமையிலான தமிழ்த் தேசிய மக் கள் முன்னணி தீர்மானம் எடுத்து விட்டதா கத் தகவல்.

புதிய விளக்கங்கள், வியாக்கியானங் களை முன்வைத்து, இருக்கும் தவிசா ளரை வரவு – செலவுத் திட்டத்தில் தோற் கடித்து, பதவி இறக்கத் தயாராகி விட்டனர் கஜேந்திரன்கள்.

எது, எப்படி என்றாலும் அவர்களின் இந்த சகுனி ஆட்டத்தினால் – கூனி நடவடிக்கையினால் – புதிய தவிசாளர் தெரிவும், அதன் மூலம் சபையின் நிர்வா கம் சு.க. தரப்பிடம் செல்வதும் தவிர்க்க முடியாதவையாகும் என்பது நிச்சயம்.

அது பற்றி அவர்கள் கவலைப்பட மாட்டார்கள். ஏனென்றால், 72 ஆண்டு களுக்கு முன்னர் நமது சகோதரர்கள் – மலையகத் தமிழ் உறவுகள் – பத்து லட்சம் பேர் நாடற்றவர்களாக்கப்பட்ட போதும் அந்தப் படுபாதகத்துக்கு இப்படித் துணை போய் கவலைப்படாமல் இருந்ததுதானே அவர்களது மரபுரிமைப் பண்பியல்பு.

அதைத்தான் இப்போதும் தமிழ்த் தேசி யம் பேசிக் கொண்டு, தமிழ்த் தேசியத் தைக் கருவறுக்கும் சக்திகளிடம் கரவெட்டி யைக் கையளிக்கும் இந்த நடவடிக்கை மூலமும் முன்னெடுக்கப் போகின்றார்கள்.

மலையகத் தமிழர்களை நாடாற்ற வர்களாக்கிய கொடூரத்துக்குத் துணை போன பாவத்துக்கு 72 ஆண்டுகளாகியும் பிராயசித்தம் செய்ய முடியாமல் தள்ளாடு கின்றது அந்தப் பரவணி.

அங்கு, மலையகத்தில் செய்த அதே வேலையைத் தனது சொந்தத் தாயகத்தி லும், குறைந்த பட்சம் பெயருக்கேனும் தமிழ்த் தேசியம் பேசும் சக்தியிடமிருந்து கரவெட்டியைப் பிடுங்கி, சுதந்திரக் கட்சியிடம் கையளிக்கும் ஈனத்தனத்துக்குத் துணை போய் இங்கும் செய்யப்போகின்றது பொன் னம்பலம் பரவணி.

ஆனால், அத்தகைய ஈனத்தனத்தைச் செய்வதற்கு இப்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எடுத்திருக்கும் தீர்மா னம் செயற்படுத்தப்படுமானால், பொன் னம்பலங்களின் உண்மை முகங்களைத் தொடர்ந்து நினைவூட்டி அம்பலப்படுத் துவது ஊடகவியலாளர்களின் தவிர்க்க முடியாத பொறுப்பாகி விடும்.

பார்ப்போம், என்ன செய்யப் போகின் றார்கள் என்று...!

மலையகத் தமிழர்களின் வாக்குரிமை யைக் காப்பதற்கு, அதற்கு எதிரான சட்டப் பிரேரணையை எதிர்த்து வாக்களித்துத் தோற்கடிக்க வேண்டிய தேவை ஏற்பட்ட போது, வாக்களிப்பில் கலந்து கொள்ளா மல் அந்தப் பத்து லட்சம் உறவுகளையும் நடு வீதியில் விட்ட மாதிரி, இப்போதும் வாக் களிக்காமல் விட்டு – அல்லது எதிர்த்து வாக்களித்து – கரவெட்டியை சு.கவிடம் தாரை வார்த்தால் அதன் விளைவு அவர் களின் அரசியலுக்கு விபரீதமாக அமை வதை நம் மக்கள் உறுதி செய்ய வேண்டும்.

– மின்னல் –

## கோப்பாய் கல்வியியற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரித்து வருகின்ற நிலையில் மரு தங்கேணி வைத்தியசாலை கொரோனா சிகிச்சை வைத்தியசாலையாக முதலில் மாற்றப்பட்டு தற்போது சிகிச்சை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கு மேலதிகமாக கொரோனா தனிமைப்படுத்தல் நிலையமாக இயங்கி வந்த கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி தற்போது கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் பூர்வாங்க நடவடிக் கைகள் முடிவடைந்து இன்று முதல் இந் தக் கல்லூரி கொரோனா சிகிச்சை நிலைய மாகச் செயற்படும் வகையில் சேவைகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன என்று பணிப்பாளர் சத்தியமூர்த்தி மேலும் தெரி வித்தார்.

## மாவட்டங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிக்கும் கொரோனாத் தொற்றை ஒழிப்பதற்கான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று மாலை நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, இந்தத் தீர்மானம் மேற்கொள் ளப்பட்டுள்ளது.

இதேவேளை, மக்களின் வாழ்வுக்குப் பாதிப்பில்லாத வகையிலும், பொருளா தாரத்துக்குப் பாதிப்பு ஏற்படாத வகையி லும், கொரோனாத் தொற்றைக் கட்டுப்ப டுத்துவதற்கு இதன்போது ஜனாதிபதியால் பல்வேறு தீர்மானங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இதன்படி, ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ள பகுதிகளில், கடந்த காலத்தைப் போன்று ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரங்களை வழங்க வேண் டாம் என ஜனாதிபதி, பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

எனினும், அரச நிறுவனங்கள், கூட்டுத் தாபனங்கள், சபைகள் மற்றும் அத்தி யவசிய சேவையில் ஈடுபடுவோர் மற்றும் ஊடக நிறுவனங்களில் பணிபுரிவோர் தமது அலுவலக அடையாள அட்டையை ஊரடங்குப் அனுமதிப்பத்திரமாக பயன் படுத்த முடியும் எனப் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதன்படி, 84 நிறுவனங்களுக்கு இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மக்களைத் தனிமைப்ப டுத்தல் நிலையங்களுக்கு அனுப்பாது, வீடுகளிலேயே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும் நடவடிக்கை வெற்றிகரமான பெறுபேற்றைத் தந்துள்ளது எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் சுகாதார வைத்தி ய அதிகாரிகள், பொது சுகாதார பரிசோத கர்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தி னர் உள்ளிட்ட தரப்பின் கண்காணிப்புக்குத் தொடர்ந்தும் உட்படுத்தப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், வீடுகளில் தனிமைப்படுத் தப்பட்டுள்ள நபர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனையை 10 ஆவது நாளில் மேற் கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் நபர்களுக்குத் கொரோ னாத் தொற்று இல்லை என உறுதிப்படுத் தப்படும் பட்சத்தில், 14 நாள்களின் பின்னர், அவர்களைச் சாதாரண முறைக்கு விட முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தொடர்ந்தும் முறையான பரிசோதனைகளை முன்னெடுப்பதன் அவசியத்தையும் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

இதன்படி, அவ்வாறு மேற்கொள்ளப் படும் பரிசோதனைகளின் பெறுபேறு களை, குறுகிய காலத்துக்குள் பெற்றுக் கொள்ள முடியுமான முயற்சியை மேற் கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள காலப்பகுதியில் இதற்கு முன்னர் மேற் கொள்ளப்பட்டவாறு அத்தியாவசிய பொருள்களை விநியோகிப்பதாக பொரு ளாதார புத்தெழுச்சிக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை, முதியோர்களுக்கு வழங் கப்படும் மாதாந்தக் கொடுப்பனவை வீடு களுக்கே சென்று வழங்கவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வீடுகளிலேயே தனிமைப் படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருகளை வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட் டுள்ளன.

நேற்றைய கலந்துரையாடலில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பதிரண, இராஜாங்க அமைச்சர்களான வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, வைத்தி யர் சீதா அரம்பேபொல, பேராசிரியர் சன்ன ஜயசுமன, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோரும் கொரோனா ஒழிப்பு ஜனாதிபதி செயல ணியின் உறுப்பினர்களும் பங்குபற் றினர்.

## 11 ஆயிரத்தைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலைகளில் தற்போது 6 ஆயிரத்து134 தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வரு கின்றனர். 4 ஆயிரத்து 905 பேர் குணம டைந்து வீடு திரும்பியுள்ளனர். 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

## நாட்டை முடக்காமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அவர் சாடினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது: –

அரசு கொரோனா வைரஸைக் கட் டுப்படுத்தத் தவறிவிட்டது. கொரோனா வைரஸ் அதிவேகத்தில் பரவுகின்ற நிலை யில் அரசு பொறுப்புணர்வில்லாமல் நடந்துகொள்கின்றது.

தேர்தலுக்கு முன்னர் கோட்டாபய ராஜ பக்ஷவிடம் காணப்பட்ட இரக்க உணர்ச் சியை தற்போது காணமுடியவில்லை.

அமைச்சர்களும் பிரதிஅமைச்சர்க ளும் தங்களுக்கு வாக்களித்த மக்களைப் புறக்கணிக்கின்றனர்.

கொவிட் 19 நிதியத்திற்கு உலகவங்கி வழங்கிய நிதி குறித்த ஆவணங்கள் எவையும் இல்லை.

அரசிடம் தற்போது உரிய திட்டங்கள் எதுவுமில்லை. அது தனது கடமையை நிறைவேற்றத் தவறிவிட்டது – என்றார்.

## மேல் மாகாணத்தில் ஊரடங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளுக்குக் கொரோனா வைரஸ் பர வும் ஆபத்துள்ளது எனவும் அவர் எச்ச ரிக்கை விடுத்துள்ளார்.

ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்ட பின்னர் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்தால் அதற்கான பொறுப்பை சுகாதார அதிகாரி களும் அரசும் பொறுப்பை ஏற்க வேண் டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய பரவலைத் தடுத்து நிறுத் துவதற்காக ஊரடங்கை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## மேல் மாகாணத்தில் ஊரடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி, குளியாப்பிட்டிய பொலிஸ் பிரி வில் அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்ப டுத்தல் ஊரடங்கு எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை காலை 5 மணிவரை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இரத்தினபுரி மாவட்டத்தின் எஹலியகொடை, குருநாகலல் நகர எல்லை ஆகியவற்றில் இன்று காலை 5 மணிமுதல் எதிர்வரும் 9ஆம் திகதி காலை 5 மணிவரை தனிமைப்படுத்தல் ஊர டங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் வழமை போன்று ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத்திரங்களை வழங்க வேண்டாம் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பொலிஸா ருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

## 21 ஆக உயர்ந்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படவில்லை. எனினும், நேற்று அவர் உயிரிழந்த பின் நடத்தப்பட்ட இரண் டாவது பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 21 ஆக அதிகரித் துள்ளது எனச் சுகாதார அமைச்சு அறி வித்துள்ளது.

# இந்திய வெளியுறவு அமைச்சர் விரைவில் இலங்கை வருவார்?

கிழக்கு மாகாணத்தின் நிலைமைகள் தொடர்பில் இந்தியா விசேட கரிசனை செலுத்தியுள்ளதோடு, அதுபற்றிய உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்வதிலும் அதீத ஈடுபாட்டுடன் அடுத்துவரும் நாள்களில் சில நகர்வுகளை செய்யவுள்ளது.

இதேவேளை, தற்போதுள்ள கொரோனா நெருக்கடிகள் சொற்பகாலத்தில் கட்டுக்குள் வரும் பட்சத்தில் குறுகிய கால விஜயமொன்றை இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் இலங்கைக்கு விரைந்து மேற்கொள்வதற்குரிய சாத்தியப்பாடுகள் அதிகமுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லேவிற்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்தவார நடுப்பகுதியில் நடைபெற்றிருந்தது.

அதாவது, அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ இலங்கைக்கு விஜயம் செய்து திரும்பியிருந்த வேளை அவசரமாக இந்திய உயர்ஸ்தானிகரின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருந்தது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மட்டுமே பங்கெடுத்திருந்தார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் அவர் தெரிவிக்கையிலேயே மேற்கண்ட விடயங்களைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

இந்திய உயர்ஸ்தானிகரின் அழைப்பில் நான் அவரை நேரில் சந்தித்திருந்தேன். இதன்போது பாரதப்பிரதமர் மோடியுடனான கூட்டமைப்பின் சந்திப்பு பிற்போடப்பட்டமை தொடர்பில் கலந்துரையாடினேன். பாரதப் பிரதமருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைந்து கலந்துரையாடலொன்றை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

எனினும் சமகாலத்தில் காணப்படுகின்ற கொரோனா சூழல்களால் அதற்கான சந்தர்ப்பங்கள் நழுவிச் செல்லும் பட்சத்தில் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்படும் கலாசார நிலையத்தைத் திறப்பதற்காக பாரதப் பிரதமர் வருகின்றபோது நாம் பிரத்தியேகமான சந்திப்பொன்றை மேற்கொள்ள முடியும் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

இதனைவிடவும் பாரதப்பிரதமரின் விஜயத்துக்கு முன்னதாக வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் இலங்கைக்கு வருகை தருவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அதற்கான நிகழ்ச்சி நிரல் தற்போதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை.

இவ்வாறான நிலையில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுதல், வளங்கள் சூறையாடப்படுதல், குடிப்பரம்பலை திட்மிட்டு மாற்றுதல், வரலாற்று இடங்களை கையகப்படுத்தல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன.

விசேடமாக புதிய ஆட்சியாளர்களின் காலத்தில் இந்தச் செயற்பாடுகள் வேகமெடுத்திருக்கின்றன. இந்த விடயங்கள் சம்பந்தமாக ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தபோதும் பாராமுகமான நிலைமைகள் நீடிக்கின்றன. ஆகவே இந்தியா இந்த விடயத்தில் கூடிய கரிசனை செலுத்துமாறு கேட்டுக்கொண்டேன்.

அத்துடன் இந்தியாவானது வடக்கு கிழக்கு மக்களின் பொருளாதார மீட்சிக்கான உரிய முதலீடுக்களைச் செய்வதற்குப் பின்னடிப்புக்களைச் செய்யாது உடன் முன்வர வேண்டும் என்றும் நான் கோரினேன். இந்தியா அவ்வாறான முன்முயற்சியொன்றை எடுக்கின்றபோது தமிழ் மக்களின் இருப்பும் இந்தியாவின் நிலைப்பும் உறுதியாகும் என்பதையும் நான் எடுத்துக் கூறியிருந்தேன்.

இந்த விடயங்கள் சம்பந்தமாக இந்தியா அதிகூடிய கரிசனை கொள்வதாகவும் அடுத்துவரும் காலத்தில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். அத்துடன் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக இந்தியா தமது நிலைப்பாட்டை மாற்றவில்லை என்றும் ஆக்கபூர்வமான வகிபாகத்தைத் தொடர்ந்தும் வழங்குவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் உயர்ஸ்தானிகர் என்னிடத்தில் கூறினார்.

மேலும் புதிய அரசமைப்பு பணிகள் தொடர்பில் ஆழ்ந்த கரிசனை கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டமையோடு, இலங்கைத் தீவில் நிலையான சமாதானத்துக்காக இந்தியா தொடர்ந்தும் தமிழ் மக்களுடன் இணைந்து செயற்படும் என்றும் குறிப்பிட்டார் எனக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

# சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி எங்களை நாங்களே பாதுகாப்போம்

சுகாதாரதுறை, மருத்துவர்கள், சமூகப்பொறுப்புள்ளவர்கள் கூறும் ஆலோசனைகளுக்கு ஏற்ப ஒவ்வொருவரும் பொறுப்புடன் செயற்பட்டு எங்களை நாங்கள் பாதுகாத்துகொள்ள வேண்டும் என யாழ்.மாநகர சபை உறுப்பினர் கே. எம்.நிலாம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போதைய சூழல் ஆபத்தாகி வருவதாக அரசாங்கம் மற்றும் சுகாதாரத்துறை அறிவித்துள்ளது. இத்தகைய அறிவித்தல்களை நாங்கள் உள்வாங்கிக் கொண்டவர்களாக எங்கள் பாதுகாப்பை நாங்களே பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.



வயோதிபர்கள், சிறுவர்கள் தொடர்பில் கூடிய கவனம் கொள்வோம். வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தந்தவர்கள் தொடர்பில் கூடிய கவனம் எடுத்து, கிராம அலுவலர்கள் பொது சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகளிடம் அறிவித்து, அவர்களையும் பாதுகாத்து அயலவர்களையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

மேலும், சுயபாதுகாப்பும் அடக்கடி கைகளை கழுவுதல் சமூக இடைவெளிகளை பின்பற்றுதல் போன்ற நடவடிக்கைகளைப் பின்பற்றி பாதுகாப்புடன் இருக்க வேண்டும் என்றார்.

# வாழைச்சேனையில் மேலும் ஐவருக்குக் கொரோனா!

வாழைச்சேனை மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் நேற்று ஐந்து கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

ஆந்தப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட வாழைச்சேனையில் மூவரும் பிறைந்துறைச்சேனையில் ஒருவரும் மாவடிச்சேனையில் ஒருவருமாக மொத்தம் ஐந்து புதிய தொற்றாளர்கள் நேற்று இனங்காணப்பட்டுள்ளனர்.

அந்தப் பகுதியில் இதுவரை 36 தொற்றாளர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மரண அறிவித்தல்



01.07.1932 30.10.2020

அமரர்

அம்மாக்குட்டி இராசரத்தினம்

கல்வயல், சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. அம்மாக்குட்டி இராசரத்தினம் 30.10.2020 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை இளையபிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், பரமு மீனாட்சிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் ரவீந்திரன் (ஓய்வு நிலை அதிபர்), ரவிச்சந்திரன் (கனடா), காலஞ்சென்ற ரஞ்சினி மற்றும் ராகினி (கொழும்பு), ரவிதாசன் (லண்டன்), ராஜினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வனஜா (ஓய்வுநிலை ஆசிரியர்), ஜெயசோதி (கனடா), காலஞ்சென்ற ஜெயக்குமார், மற்றும் மீரா (லண்டன்), சதானந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, சுந்தரம்பிள்ளை மற்றும் செல்லமுத்து (ஓய்வுநிலை ஆசிரியர்), சிவக்கொழுந்து (லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சுப்பிரமணியம் மற்றும் ஜெகசோதி (லண்டன்), புவனேஸ்வரி (கனடா), ஸ்ரீனிவாசன்(லண்டன்), ஆகியோரின் மைத்துனியும் பிரசன்னா, சோபிகன், அனுஜன், இந்துசன், அஜந்தா, அஜித், அனிந்தா, சிவஜா, ஜஸ்மிரன், மித்திரா, யாதவன், கஜானன், அரன், மிதுன், மனோஜ், பவித்திரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரிகைகள் எதிர்வரும் செவ்வாய்கிழமை [ 03.11.2020 ] கனடாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இ. ரவீந்திரன் (மகன்) – +94778994628 சாவகச்சேரி
இ. ரவிச்சந்திரன் (மகன்) – 16475229819 கனடா
இ. ரவிதாசன் (மகன்) – 447305741002 லண்டன்

துயரால் வருந்தும் குடும்பத்தினர்

# இங்கிரிய ஆடைத் தொழிற்சாலையில் 21 பேருக்குக் கொரோனாத் தொற்று!

கொழும்பு, நவ.02

இங்கிரிய பகுதியில் அமைந்துள்ள முன்னணி ஆடைத் தொழிற்சாலையில் 21 ஊழியர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இந்தத் தொழிற்சாலையில் தொழில் புரியும் ஊழியர் ஒருவர் கடந்த வாரம் கொரோனாத் தொற்றுக்குள்ளானமை கண்டறியப்பட்டது. இதன் பின்னர் ஏனைய 140 ஊழியர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். சோதனைகளின் முடிவிலேயே மேலும் 20 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளானமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொரோனா தொற்றுக்குள்ளான மேற்படி நபர்கள் ரம்புக்கனவில் அமைந்துள்ள கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அது மாத்திரமன்றி கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களுடன் தொடர்புகளைப் பேணியநபர்களிடமும் பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கொட்டாவ பல்பொருள் அங்காடி ஊழியர்களுக்குக் கொரோனா!

சொப்ட்லொஜிக் க்ளோமார்க் நிறுவனத்தின் கொட்டாவ கிளையில் பணியாற்றும் ஊழியர்கள் இருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக சொப்ட்லொஜிக் க்ளோமார்க் நிறுவனத்தால் வெளியிடப்பட்டிருக்கும் பொது அறிவித்தலில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:–

கொட்டாவ பகுதியிலுள்ள எமது நிறுவனக் கிளையில் பணியாற்றும் இரு ஊழியர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வைரஸ் தொற்றிலிருந்து ஊழியர்களைப் பாதுகாக்கும் நோக்கில் எமுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் ஊடாகவே இவ்வாறு தொற்று ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அங்கு பணியாற்றிய அனைத்து ஊழியர்களுக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றமையுடன் 14 நாள்கள் சுய தனிமைப்படுத்தலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்தோடு வாகனத்தரிப்பிடம், உணவறை உள்ளடங்கலாக கொட்டாவ சொப்ட்லொஜிக் க்ளோமார்க் நிறுவனத்தின் அனைத்துப் பகுதிகளையும் தொற்று நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் முறையாகப் பின்பற்றுவதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம்.

எப்போதும் எமது நிறுவன பங்காளர்கள், ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் பாதுகாப்புக்கே நாம் முன்னுரிமை வழங்குகின்றோம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கோட்டை விடப்பட்ட 'கொவிட்' தடுப்பு!

*'அணில் ஏற விட்ட நாய்'* – என்ற பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு.

நிலத்தில் அணில் ஓடும் போது அதை மறித்துப் பிடிக்க வாய்ப்பு இருந்த போதிலும், அதைச் செய்யாமல் தவற விட்டு விட்டு, அது மரத்தில் உயரத்துக்கு ஏறிய பின்னர் கீழே இருந்து அண்ணாந்து பார்த்து, குலைத்துப் பிய்த்து உதறப் போவது போல துடிக்குமாம் நாய்.

அந்த நிலையில்தான் 'கொவிட் – 19' வைரஸைக் கட்டுப்படுத்தும் இலங்கை அரசின் தற்போதைய நிலைமை இருக்கின்றது.

*'குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடுவது'* போல – அல்லது *'கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வது போல'*, இவ்வளவு காலமும் வாளாவிருந்து விட்டு கெடுபிடிக் கட்டுப்பாடுகளையும், முடக்க அறிவிப்புக்களையும் போக்குவரத்துத் தடை விதிகளையும் இப்போது வெளியிடுகின்றது அரசு.

இரண்டாவது கொத்தணிப் பரம்பல் பற்றிய தகவல் – மினுவாங்கொட 'பிரண்டிஸ்' ஆடைத்தொழிற்சாலையில் தொற்று ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்குப் பரவிய செய்தி – கிடைத்த போதே இந்த முடக்க நிலையைக் கொண்டு வாருங்கள் என்று பல தரப்புகளினாலும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது.

ஆனால், இப்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா சுட்டிக்காட்டுகின்றமை போல, *'ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருப்பது போல'*, நாட்டில் பெருங்கொள்ளை நோய்த் தொற்று எப்படிப் பரவினாலும் நமது கரிசனை நமது அரசியல் இலக்குத்தான் என்று நடந்து கொண்டது அதிகார பீடம்.

கொள்ளை நோய்த் தொற்றுப் பரவல் பற்றிய எச்சரிக்கைளை ஒரு புறம் வைத்துவிட்டு இருபதாவது அரசமைப்புத் திருத்தம் மூலம் கட்டுமட்டிலாத – வரையறையில்லாத – அதிகாரங்களைத் தாம் சுவீகரித்துக் கொள்வதில்தான் ராஜபக்ஷக்கள் தீவிரமாக இருந்தனர்.

*"இருபதை நிறைவேற்றிக் கொள்ளும் முனைப்பில் மட்டுமே அரசு இருந்தது. அதன் கவனம் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் இருக்கவேயில்லை. அதன் விளைவாகவே நாட்டில் கொரோனாத் தொற்று வீரியம் அடைந்துள்ளது"* – என எதிர்க்கட்சித் தலைவர் சுமத்தும் குற்றச்சாட்டுப் புறக்கணிக்கத் தக்கதல்ல.

ஒக்ரோபர் மாதமளவில் மூவாயிரம் பேர் இந்த வைரஸ் தொற்றுக்கு ஆளாகியிருந்தனர். ஆனால் கடந்த ஒரு மாதத்தில் அது ஏழாயிரத்தினால் எகிறி இப்போது நாட்டில் பத்தாயிரம் பேருக்கு மேல் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இரண்டாவது அலை வீசத் தொடங்கியுள்ளது என்று கண்டவுடனேயே முழு நாட்டையும் முன்னைய நிலைமை போன்று முடக்கி, ஊரடங்கைப் பிறப்பித்து, மாவட்டங்களுக்கு இடையில் போக்குவரத்தைத் தடுத்திருந்தால் நிலைமையை ஓரளவுக்குக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கலாம். நாட்டுடன் சேர்ந்து பரவலையும் முடக்கியிருக்க முடியும்.

அப்படிப் பலர் நாட்டை முடக்கும்படி கோரிய போதெல்லாம், அதைச் செய்யாமல் தொற்று இன்னமும் சமூகத் தொற்றாக விரிவாக்கம் பெறவில்லை என்று சொல்லாடல் சர்ச்சை பண்ணிக் கொண்டிருந்தார் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி.

மினுவாங்கொடை கொத்தணியை அடுத்து, பேலிய கொட மீன்சந்தைக் கொத்தணி, வைரஸ் தொற்றுக்கான அடுத்த தளமாகியுள்ளது என்று அறியப்பட்டவுடனாவது நாட்டை முடக்கி, ஊரடங்கைப் பிறப்பித்து, மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்தைத் தடுத்திருக்கலாம். அதையும் அரசு செய்யத் தவறிவிட்டது.

ஆடைத் தொழிற்சாலை கொத்தணியை விட பேலியகொட மீன் சந்தை விவகாரம் மிக ஆபத்தானது.

ஆடைத் தொழிற்சாலைக்கு ஒரே ஊழியர்களே தினசரி வந்து செல்வார். ஆனால் மீன் சந்தைக்கு அப்படியல்ல. தினசரி வெவ்வேறு நபர்கள் – அதுவும் பேலியகொட மீன் சந்தை தலைநகர் கொழும்பின் மத்திய கடலுணவு மையம் என்பதால் நாளாந்தம் பல்லாயிரம் பேர் – வந்து செல்லும் நிலையம். அத்தோடு மீன் சந்தை சுவாத்தியம், கொரோனா வைரஸ் பரவலுக்கு மிகவும் சாத்தியமானது என்பது சீனாவில் அது உற்பத்தியாகிப் பரவிய வுகான் மாகாணப் படிப்பினை மூலம் நாம் அறிந்ததுதான்.

எனவே, குறைந்த பட்சம் பேலியகொட மீன் சந்தையை மையம் கொண்டு ஒரு கொத்தணி உருவாகியுள்ளது என்ற சந்தேகம் ஏற்பட்ட உடனேயே தலைநகரையும் நாட்டையும் முடக்கியிருக்க வேண்டும். மெத்தனமாக இருந்து விட்டு, இப்போது காலம் பிந்தி ஆரவாரங்கள் செய்யப்படுகின்றன.

இதேசமயம், கொழும்பில் சுமார் ஆயிரம் பேர் வேலை செய்யும் தொழிற்சாலை ஒன்றின் ஊடாக இன்னொரு தொற்றுக் கொத்தணி உருவாகியிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எச்சரிக்கைத் தகவல் ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்.

ஒட்டு மொத்தத்தில் இப்போது அரசு முன்னெடுக்கும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நேயாளியின் உயிர் பிரிந்த பின்னர் சிகிச்சை அளிக்கும் விவகாரம் போலவே தென்படுகின்றது.

# கொரோனா விரிவடைத்தமைக்கு அரசே முழுக் காரணம் ஆகும்!



## குற்றஞ்சாட்டுகிறார் சஜித்

20 ஐ நிறைவேற்றிக் கொள்ளும் முனைப்பில் மட்டுமே அரசாங்கம் செயற்பட்டதன் விளைவாகவே, இன்று நாட்டில் கொரோனா தொற்று வீரியமடைந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டில் அதிகரித்துள்ள கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். சஜித் பிரேமதாஸ மேலும் கூறியுள்ளவை வருமாறு:–

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இன்று 10 ஆயிரத்தைக் கடந்து 20 மரணங்களும் பதிவாகியுள்ளன.

கொரோனாவின் இரண்டாவது அலை ஏற்பட முன்னர், அதாவது ஒக்ரோபர் மாதமளவில் 3 ஆயிரம் பேரே கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆனால், நான்கே வாரங்களில் 7 ஆயிரம் பேர் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இப்போதும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, இதனை சமூகத்தொற்று இல்லை என்றா கூறப்போகிறார்?

நாடாளுமன்றில் வைத்து நாம் சுகாதார வழிமுறைகள் தொடர்பாகக் கேள்வி எழுப்பிய போது, அமைச்சர் பவித்ராவோ நாடாளுமன்றம் என்பது பொதுவான இடம் இல்லை என்று பதிலளித்தார்.

தற்போது நாடாளுமன்றில் கடமையாற்றும் பொலிஸார் ஒருவருக்குக் கொரோனா தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால், இரண்டு நாள்கள் நாடாளுமன்றை மூடி தொற்று நீக்கமும் செய்தார்கள்.

20 ஐ நிறைவேற்றிக் கொள்ளும் ஆசையாலேயே அரசாங்கம் கொரோனா விடயத்தை கடந்த காலங்களில் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

அடுத்த வாரமளவில் ஒரு நாளைக்கு நாடாளுமன்ற அமர்வை நடத்தத் தீர்மானித்துள்ள அரசாங்கம், 20 ஐ நிறைவேற்ற மட்டும் கடந்த காலங்களில் தொடர்ந்தும் நாடாளுமன்றைக் கூட்டியது.

இதனால்தான் தற்போது நாட்டில் இந்த பரவல் வேகமெடுத்துள்ளது. கொரோனா விடயத்தில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. கொரோனாவை விட, தனது அரசியல் அதிகாரத்தைப் பலப்படுத்தவே அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்பது இதன் ஊடாக நன்றாக தெரியவந்துள்ளது.

தற்போது 20 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகள் இன்னமும் வெளிவரவில்லை. வத்தளையில் 1000 பேர் வேலை செய்யும் தொழிற்சாலையின் ஊடாக இன்னொரு அலை ஏற்படும் அச்சம் உள்ளதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆபத்தான நிலையில், அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறது? அரசாங்கம் எமது கருத்துக்களை செவிசாய்க்கவில்லை. நாம் நாடாளுமன்றில் கருத்துக்களை வெளியிடும்போது கூட அரசாங்கத் தரப்பினர் கூச்சலிட்டார்கள்.

எனினும், நாம் அன்று கூறிய விடயங்கள் இன்று உண்மையாகியுள்ளன. இதனை மக்களும் இன்று உணர்ந்துள்ளார்கள். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது தாமதமாகும்!

## கல்வி அமைச்சு

பாடசாலைகளை மீள ஆரம்பித்தல் தாமதமடையும் என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில சீ. பெரேரா தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் தவணை பாடசாலை விடுமுறை முடிந்து மீண்டும் எதிர்வரும் 9ஆம் திகதி பாடசாலைகளை மீள ஆரம்பிக்கத் திட்டமிட்டிருப்பினும் தற்போது பரவிவரும் கொரோனா தொற்று காரணமாக உரிய திகதியில் பாடசாலைகளை மீளத் திறக்க முடியாது போகும் என அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக சுகாதார அதிகாரிகளிடம் பரிந்துரைகளைக் கேட்டுள்ளதாகவும் சுகாதார பரிந்துரைகளின் அடிப்படையில் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தாமதடையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

122 பிரதேசங்களுக்கு பொலிஸ் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளதோடு மாணவர்களும் இந்தத் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

மாணவர்களின் செயற்பாடுகளுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படாதிருக்க மீண்டும் தொலைக் கல்வி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்திய வகையில் அரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வசதிகள் குறைந்த கிராமிய பிரதேச மாணவர்களுக்கும் இந்த வாய்ப்பை வழங்கும் வகையில் விசேட வேலைத் திட்டத்தை தயாரிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒக்ரோபர் 9 ஆம் திகதி பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட இருந்த போதிலும் கொரோனா தொற்று காரணமாக பாடசாலைகளின் இரண்டாம் தவணை விடுமுறை ஒக்ரோபர் 5 ஆம் திகதி வழங்கப்பட்டது.

உயர் தரப்பரீட்சை முடிவடைந்ததும் மூன்றாம் தவணை நவம்பர் 9 ஆம் திகதி ஆரம்பமாகி டிசெம்பர் 23 வரை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாக் குணமடைவு எண்ணிக்கை அதிகரிப்பு!

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 506 பேர் குணமடைந்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வீடுகளுக்குச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 905 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 663 ஆகப் பதிவாகியுள்ளது.

அவர்களில் 5 ஆயிரத்து 733 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றமையுடன், இந்த தொற்று காரணமாக 20 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2020
'நீண்டகாலத்தின் முன்புஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்.' – வாரன் பஃவெற் (அமெரிக்கத் தொழிலதிபர்)

# தற்போது பரவும் வைரஸ் உடலில் வெகுவாக உட்புகும் தன்மையுடையது

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

நாட்டில் தற்போது பரவும் கொரொனா வைரஸ் உடலில் வேகமாக உட்புகும் தன்மை கொண்டது என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

எனவே கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த பொது மக்களும் அரசாங்கத்துக்கு உரிய ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

கொரோனாவின் நிலைமை தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

இலங்கையில் தற்போது பரவும் வைரஸ் வேறுபட்ட தன்மையைக் கொண்டுள்ளமையால், இதுதொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கிணங்க, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வின் அறிக்கை தற்போது சுகாதார அமைச்சிடம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைக்கு இணங்க, மினுவாங்கொடை, பேலியகொட, பேருவளை போன்ற கொத்தணிகளில் பரவியது ஒரு வகையான வைரஸ் எனத் தெரியவந்துள்ளது.

இலங்கையில் தற்போது இந்த ஒரு வகையைச் சேர்ந்த வைரஸின் தாக்கமே காணப்படுகிறது. எனினும்,



இந்த வைரஸ் வீரியம் கூடியது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பரவும் வேகமும், உடலில் வேகமாக உட்புகும் தன்மையும் கொண்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலாவது அலையின்போது காணப்பட்ட வைரஸ் அல்ல இது. இதனை மக்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

அரசாங்கம் என்ற ரீதியில் நாம் மக்களைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம். அதேபோல், இந்த சவாலை முறியடிக்க, மக்களும் அரசாங்கத்துக்கு உரிய ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்கிறோம். – என்று தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முயன்றவர் கைது!

போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து, இத்தாலிக்குச் செல்ல முயன்ற குற்றச்சாட்டில் இலங்கை இளைஞரை, கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கட்டார் – டோஹா வழியாக இத்தாலிக்கு செல்ல முயன்ற குற்றச்சாட்டில் போலி குடியிருப்பு கடவுச்சீட்டுடன் அந்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இளைஞரின் கடவுச்சீட்டு மற்றும் பிற ஆவணங்களை உட்படுத்தி மேலதிக விசாரணையை அதிகாரிகள் முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது, இத்தாலியில் வசிக்கும் ஒருவரின் விவரங்களையும் அவரது புகைப்படம், விசா அட்டை மற்றும் கடவுச்சீட்டை மட்டுமே இதற்காக பயன்படுத்தினார் எனவும் அந்த இளைஞர் தெரிவித்தார் எனவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த சந்தேக நபர் மன்னார் – வெல்லாங்குளத்தில் வசிக்கும் 26 வயதுடையவர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள சி.ஐ.டி.யிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# கொரோனாத் தொற்றாளர்கள் சமூகத்திலிருந்தே அடையாளம்!

இலங்கையில் தற்போது அடையாளம் காணப்படும் கொரோனா நோயாளர்களில் பெரும்பாலானோர் சமூகத்தில் இருந்தே பதிவாகுகின்றனர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பேலியகொடை மற்றும் மினுவாங்கொடை கொரோனா கொத்தணிகள் தவிர மற்றுமொரு கொத்தணி உருவாகும் அபாயம் காணப்படுவதாகவும் வைத்தியர் ஹரித்த அளுத்கே தெரிவித்துள்ளார்.

# சுகாதார விதிகளை மீறினால் சந்தையை மூடவேண்டிவரும்!

## நல்லூர் தவிசாளர் எச்சரிக்கை

சுகாதார நடைமுறைகளை, விதிகளை பின்பற்றாமல் அசண்டையீனமாக நடந்து கொண்டால் சந்தைகளை மூட நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளேன் என நல்லூர் பிரதேச சபை தவிசாளர் த. தியாகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கொரோனா அச்சம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழில் உள்ள பிரதான சந்தைகளில் ஒன்றான திருநெல்வேலி சந்தை மற்றும் கொக்குவில் சந்தை ஆகியன நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்டவை.

அந்தச் சந்தைகளுக்குத் தினமும் பெருமளவான மக்கள் வந்து செல்கின்றனர். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனோ தொற்று அபாயத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கும் முகமாக எமது ஆளுகைக்கு உட்பட்ட சந்தைகளில் வியாபர நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வியாபாரிகள், சந்தைக்கு வரும் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளையும் விதிகளையும் பின்பற்றுமாறு கோரி வருகின்றமையுடன் எமது சபையின் உத்தியோகஸ்தர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

இருந்த போதிலும் பெருமளவான வியாபாரிகள், பொதுமக்கள் சுகாதார நடைமுறைகள் விதிகளை மீறி செயற்படுகின்றனர் என எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று உள்ளன.

தொடர்ந்து இவ்வாறான செயற்பாடுகளில் வியாபாரிகள், பொதுமக்கள் ஈடுபடுவார்களானால் எமது ஆளுகைக்குள் உள்ள திருநெல்வேலி சந்தை மற்றும் கொக்குவில் சந்தை என்பவற்றை மூடுவதற்கு நடவடிக்கை எடுப்போம். – எனத் தெரிவித்தார்.

# இரு வைத்தியர்கள் மற்றும் ஒரு தாதியருக்கு களுபோவில வைத்தியசாலையில் கொரோனா!

களுபோவில போதனா வைத்தியாசாலையில் பணியாற்றிய வைத்தியர் இருவருக்கும் தாதியரொருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

களுபோவில போதனா வைத்தியாசாலையின் 15 பி வோர்ட்டில் பணியாற்றிய வைத்தியர் இருவருக்கும் தாதியரொருவருக்குமே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் கொரோனா தொற்று கண்டறியப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 663 ஆகக் காணப்படுகின்றது.

இவர்களில், நான்காயிரத்து 399 பேர் வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளமையுடன் இன்னும் ஆறாயிரத்து 244 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இலங்கையில் இதுவரை 20 பேர் கொரோனா தொற்றால் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புளியங்குளத்தில் கைதான பூசகரும் 14 பேரும் சுய தனிமைப்படுத்தலில்!

வவுனியா, புளியங்குளம், பழையவாடி கிராமத்தில் வழிபாட்டில் ஈடுபட்ட நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட 15 பேரும் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கொவிட் – 19 தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாது வெளி மாவட்டவர்களுடன் இணைந்து வவுனியா, புளியங்குளம், பழையவாடி கிராமத்தில் உள்ள சிவ நாகதம்பிரான் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டதாக நேற்று பூசகர் உள்ளிட்ட 15 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த நபர்களிடம் தனிமைப்படுத்தல் சட்ட மீறலின் கீழ் வாக்கு மூலத்தைப் பெற்ற பொலிஸார் கடும் எச்சரிக்கையின் பின் 15 பேரையும் விடுவித்தனர். அத்துடன் குறித்த 15 பேரையும் அவர்களது வீடுகளில் சுய தனிமைப்படுத்தும் நடவடிக்கை சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்டது.

அந்தவகையில், கனகராயன்குளம் பகுதியில் இருவரும், வவுனியாவில் 8 பேரும், புளியங்குளத்தில் 5 பேரும் இவ்வாறு சுய தனிமைப் படுத்தலுக்கு உள் ளாக்கப்பட்டுள்ளனர்.

# கடல்நீர் உட்புகுந்தமை தொடர்பாக யாழ்ப்பாணத்தில் ஆய்வு நடவடிக்கை!

## அரச அதிபர் தெரிவிப்பு

யாழில் கடல் நீர் உட்புகுந்தமை தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது எனினும் உண்மையான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை என யாழ். அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் கடல் நீர் உட்புகுந்த நிலைமை தொடர்பில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

கடல் நீர் உட்புகுந்த சம்பவம் யாழ் கல்லுண்டாய், ஊர்காவற்துறை, குருநகர், நாவாந்துறை ஆகிய பிரதேசத்தில் உணரப்பட்டுள்ளதாக மாவட்ட செயலகத்துக்குத் தகவல் கிடைத்திருந்தது.

அதனை உடனடியாக அனர்த்த முகாமைத்துவப் பிரிவினருக்கு அறிவித்திருக்கிறோம். அதேபோல் நான் நேரடியாக அந்தப் பகுதிக்கு சென்று அந்த இடத்தைப் பார்த்து அந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்துள்ளேன்.

இது கல்லுண்டாய் பகுதி உட்பட யாழ். மாவட்ட கரையோர பகுதிகள் சிலவற்றில் இந்தக் கடல் நீர் உட்புகுதல் அவதானிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இருக்கின்ற உவர்நீர் கட்டுகள் சேதமடைந்தமையின் காரணமாகவும் நீர் உட்புகுந்திருந்திருக்கலாம். அந்தப் பகுதி மக்கள் இது தொடர்பில் தகவல் தெரிவிக்கையில், இது ஒரு புதிதான விடயமாகக் காணப்படுகிறது. தங்களுக்கு ஒரு புதிதான அனுபவமாக இது உள்ளது என அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

ஆகவே, இந்த விடயம் பற்றி அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். அந்தப் பகுதி மக்கள் கூறியமையின் படி முழு போயா தினத்துக்கும் இவ்வாறான இயற்கையான செயற்பாடு இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கிறோம். இருந்தபோதிலும் இது பற்றித் தொடர்ச்சியாக ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன.

உண்மையாக ஏன் இவ்வாறு கடல் நீர் உட்புகுந்தது என்பது தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் இதற்கு உண்மையான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. இந்த சம்பவம் எமக்கும் ஒரு புதிய விடயமாகக் காணப்படுகிறது. இது தொடர்பில் நாங்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினரிடம் அறிவித்திருக்கின்றோம்.

வடக்கு மாகாணத்தில் இவ்வாறான சம்பவம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தில் பரவலாக உணரப்பட்டுள்ளது. எனவே இதுதொடர்பில் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு விரிவாக ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பிரதமரை பிரதம விருந்தினராக அழைத்து ஐ.நா.தூதரகம் பெரும் தவறிழைத்துள்ளது

## சுமந்திரன், செல்வம் கூட்டாக ஆட்சேபம்

இலங்கையில் உள்ள ஐ.நா. அலுவலகம் பிரதமரை பிரதம விருந்தினராக அழைத்தமை தவறானது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கையில் உள்ள ஐ.நா. அலுவலகம் இணையவழி ஏற்பாடு செய்திருந்த நிகழ்வொன்றில் இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியிருக்கின்றார்கள்.

ஆனால் தமிழ் மக்கள் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தமக்கு எதிராக இடம்பெற்ற பல்வேறு மனித உரிமைகள் மீறல் தொடரிபில் ஐ.நா விடம் முறையிட்டுள்ளார்கள்.

இந்நிலையில்பொறுப்புக்கூறவேண்டிய அவரையே பிரதம விருந்தினராக அழைத்தமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வினவிய போதே அவர்கள் இவ்வாறுதெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவிக்கையில் –

இது மிக மிக பொருத்தமற்ற ஒரு நிலைப்பாடு. இலங்கையில் நடைபெற்றதாகச் சொல்லப்படுகின்ற மனித



உரிமைகள் மீறல் தொடர்பில் ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்த மூவர் அடங்கிய குழுவின் அறிக்கை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்ட விசேட அறிக்கை, அதனைவிட இலங்கையில் ஐ.நா. தவறு விட்டதாகத் தெரிவிக்கும் அறிக்கை இவை எல்லாவற்றிலும் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டன எனவும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டன எனவும் பல விதமான யுத்தக் குற்றச் சாட்டுகள் இடம்பெற்றன எனவும், ஐ.நாவே தெரிவித்துள்ள நிலையில் இதற்கு பொறுப்பு கூறவேண்டிய ஒருவரை ஐ.நா. தன்னுடைய நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக அழைப்பது மிக மிகத் தவறான ஒன்றாகும். என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தவை வருமாறு –

ஐ.நாவின் தீர்மானங்கள் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே அனைவரின் நிலைப்பாடாகும். அன்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்க இராஜாங்கச் செயலரும் அதனை வெளிப்படுத்திச் சென்றிருக்கின்றார். இந்த நிலையில் விசாரணை செய்யப்பட வேண்டிய அல்லது அது தொடர்பில் கேள்விக்குட்படுத்த வேண்டிய ஒருவரை பிரதம விருந்தினராக அழைத்தமை ஏற்புடையதாக இருக்காது என்பது எனது கருத்து.

மனித உரிமைகள் மீறல் தொடர்பில் விசாரணை செய்யப்பட வேண்டியவர்களின் பெயர் பட்டியலில் மஹிந்த ராஜபக்ஷவின் பெயரும் இருக்கிறது. அந்த வகையில் ஐ.நா. கொழும்பு அலுவலகம் அவரை பிரதம விருந்தினராக அழைத்தமை தமிழ் மக்களுக்கு ஐ.நா. சபை மீது தவறான பார்வையை ஏற்படுத்தும். ஐ.நாவின் தீர்மானத்திலிருந்து விலகப் போவதாக இலங்கை அரசு அறிவித்திருக்கும் நிலையில், இந்தச் செயற்பாடு முழு ஐ.நா. சபையையுமே தமிழ் மக்கள் சந்தேகின்ற நிலையை ஏற்படுத்தும். ஆகவே, இந்த விடயத்தில் – ஐ.நா. தமிழ் மக்கள் விடயத்தில் – சரியாக நடந்துகொள்ளுமா என்ற சந்தேகத்தைத் தமிழ் மக்களிடம் ஏற்படுத்தியிருக்கிறது. – என்றார்.

## மறு அறிவித்தல்வரை மெனிக் சந்தை பூட்டு!

நாட்டின் கொரோனா நோய் தொற்றின் தீவிரம் காரணமாக, கொழும்பு – புறக்கோட்டை மெனிங் சந்தையை மறு அறிவித்தல் வரை மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாக மெனிங் சந்தை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்தில் அமுலிலுள்ள ஊரடங்குச் சட்டத்தை எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 5 மணி வரை நீடிக்க அரசு தீர்மானித்துள்ளமையும் குறிப்பிடதக்கது.

## கடன்களைச் செலுத்துவதற்கு மீனவருக்கு சலுகைக் காலம்!

மீனவர்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான நிவாரண காலத்தை பிரகடனப்படுத்தி மூலதன கடன் வழங்கும் திட்டமொன்றை அமுலாக்கப்போவதாக ராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார். கடற்றொழில் துறைமுகங்களில் குவிந் துள்ள மீன்களைக் கொள்வனவு செய்வதற்கு முப்பது கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சின் இடையீட்டு டன் மீன்கள் கொள்வனவு செய்யப்படும். ரின் மீன் உற்பத்தியாளர்கள் கருவாடு மற்றும் மாசி உற்பத்திகளில் ஈடுபடுவோர் குளிர்பதன வசதிகளைக் கொண்ட வர்த்தகர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுடன் பேச்சு நடத்தி கடலுணவை விநியோகிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

## தெஹிவளை பகுதியில் 13 பேருக்குத் தொற்று!

தெஹிவளையைச் சேர்ந்த 13 பேருக்கு கொரோனா வைரஸ்தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) அடையாளம் காணப்பட்ட 239 பேரில், குறித்த 13 பேரும் உள்ளடங்குகின்றனர் என அந்த நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் கொழும்பு 1 – 15 வரையான பகுதிகளிலிருந்து 51 பேரும், கொத்தட்டுவ – 4, ஹங்வெல – 11, பொரளை – 7 பேர் என கொழும்பு மாவட்டத்தில் 86 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மஹரகமவில் 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இதுவரை உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், மிரிஹானை – பிரகதிபுர, வெல்சிரிபுர மற்றும் ராகுலாபுர பகுதிகளில் சுமார் 1600 குடும்பங்களின் நடமாட்டத்தை முற்றிலுமாகக் கட்டுப்படுத்த சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், அந்தப் பகுதியை முற்றிலுமாகக் கிருமி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொரோனா தொற்று கண்டறியப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 663 ஆகக் காணப்படுகின்றது.

இவர்களில், நான்காயிரத்து 399 பேர் வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளமையுடன் இன்னும் ஆறாயிரத்து 244 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இலங்கையில் இதுவரை 20 பேர் கொரோனா தொற்றால் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிகிரியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திடீர் சாவு!

சிகிரியா சுற்றுலா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, திடீரென உயிரிழந்துள்ளார்.

குறித்த அதிகாரி கடந்த சனிக்கிழமை தனது கடமை நேரத்தில், கண்காணிப்பு மேற்பார்வைகளைச் செய்து கொண்டிருந்த போது திடீரென மயக்கமுற்று கீழே விழுந்துள்ளார்.

இதனையடுத்து, உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. எனினும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவரது மரணத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். பல்கலையில் மேலும் இரு பீடங்கள் அமைக்கத் திட்ட முன்மொழிவு சமர்ப்பிப்பு!

யாழ்ப்பாணம், நவ.02

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மேலும் இரண்டு பீடங்களை உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான முன்மொழிவுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பல்கலைக் கழகப் பேரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

மருதனார்மடத்தில் அமைந்துள்ள இராமநாதன் நுண்கலைக் கல்லூரியை நுண்கலைப் பீடமாகவும், கைதடியில் அமைந்துள்ள சித்தவைத்தியத்துறையை சித்த வைத்திய பீடமாகவும் தரமுயர்த்துவதற்கான முன்மொழிவுகளே நேற்றைய பேரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன.

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கல்லூரியை நுண்கலைப் பீடமாகத் தரமுயர்த்துவதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தலைமையிலும், சித்தவைத்தியத்துறையை சித்த வைத்திய பீடமாகத் தரமுயர்த்துவதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென முன்னாள் துணைவேந்தர் சு. மோகனதாஸ் தலைமையிலும் பேரவையினால் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன.

அந்தக் குழுக்கள், பல்வேறு கள ஆய்வுகள், சந்திப்புகளின் முடிவில் தங்கள் சிபாரிசுகள் மற்றும் திட்ட முன் மொழிவுகளை நேற்று இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்தன. அவற்றை இம் மாதம் இடம்பெறவுள்ள விசேட மூதவை (செனற்) கூட்டமொன்றில் முன்வைத்த பின், மூதவையின் சிபார்சுடன் விசேட பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்து, பேரவை அங்கீகாரத்துடன் பீடங்களைத் தரமுயர்த்துவதற்கான வேண்டுகையைப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்புவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

## பொலிஸ் நிலையத்தில் கைதி தற்கொலை பொலிஸாரின் கவனக் குறைவே காரணம்!

நவகமுவ பொலிஸ் நிலையத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த போது உயிரிழந்தார் எனக் கூறப்பட்ட சந்தேக நபரின் மரணத்துக்கு காரணம் தற்கொலை என்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு –

நவகமுவ பொலிஸ் நிலையத்தில் சிறைவைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உயிரிழந்துள்ளார் எனத் தெரியவந்த மையை அடுத்து உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இதன்போது கொள்ளைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த 25 வயதுடைய சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

மரணம் தொடர்பான விசாரணைகளைக் கடுவல பதில் நீதிவான் மேற்கொண்டிருந்தார். இந்த நிலையில் சடலம் தொடர்பான மரண பரிசோதனைகளை அரச சட்ட வைத்தியர் சன்ன பெரேரா மேற்கொண்டார்.

அதற்கமைய இந்த மரணம் தூக்கிட்டு கொண்டமையின் காரணமாகவே இடம்பெற்றுள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. அதன்படி சந்தேக நபர் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்றே கருதப்படுகின்றது.

எனினும் அப்போது கடமையில் இருந்த பொலிஸாரின் கவனக் குறைவின் காரணமாகவே, இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்பதால், அவர்களுக்கு எதிராகப் பொலிஸ் ஒழுங்காற்று நடவடிக்கையின் கீழ் நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# கர்மயோகி காந்தி மாஸ்டர்

பகுதி - 02

## ஒரு சான்றோனின் சரிதை இது



● வே.வரதசுந்தரம்

“காந்தி ஐயா – இராசநாயகி திருமணத்தில் பல புதுமைகளைக் கண்டோம். கதர்நூற் சேலையை மண மகள் கூறையாக அணிந்தார். சர்வோதய முறைப்படி திரு மணம் நிகழ்ந்தது.”

(நேற்றைய தொடர்ச்சி)

**சத்திய வாழ்வு**

'நம்ப நட நம்பி நடவாதே' என்பது பழமொழி. நம்பி நடப்பது எனது இலட்சியம்.

'துணைக்குப்போனாலும், பிணைக்குப் போகாதே' என்பது பழமொழி. பிணைக்குப் போய்நின்று சேவை செய்வதே எனது கர்மயோகம்.

'தனக்குக் கண்டு தானம் வழங்கு' என்பது பழ மொழி. 'தனக்கின்றித் தானம் வழங்கு' என்பது எனது புதுமொழி.

– இப்படிப் புதுமையான சிந்தனையுடையவர் காந்தி மாஸ்டர். இப்படிப் புதுமையான வாழ்வை நாடியவர் காந்தி ஐயா.

இவர் மாதகல் கிராமத்தில பிறந்து திருக்கோண மலைமண்ணில்நீண்ட காலம்சமூகசமயப்பணிகளைப் பலவாறு ஆற்றியவர். அல்லற்படும் நெஞ்சங்களுக்கு ஆறுதல் தந்தவர்.

மாதகல் மண்ணில் நுணசை என்ற குறிச்சியில் 1918 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி பிறந்தவர் காந்தி ஐயா. அவருடைய தந்தையார் ஆறுமுகம் பொன் னம்பலம். தாயார் நன்னிப்பிள்ளை. இவரது தமைய னார் செல்லையா. சின்னப்பிள்ளை என்ற தங்கையும் தில்லைநாதன் என்ற தம்பியும் இவருக்குண்டு. மாதகல் கந்தையா என்று அன்று அழைக்கப்பட்டார். காந்தி மாஸ் டர்என்றுபலராலும்இன்றுபரிவுடன்அழைக்கப்படுவதற்கு அவருக்கு காந்தியத்தில் இருந்த ஈடுபாடும், காந்திய நெறியில் அவர் வாழ்ந்ததும் முக்கிய காரணமாகும். இப்படி அவருக்கு காந்தீயத்தில் எவ்வாறு ஈடுபாடு ஏற் பட்டது என்பதை அவரே கூறக்கேட்போம்.

“ஐந்து வயதில் அரிவரி படிக்கும்போது ஒரு ஐயா வந்து எமது பாடசாலையில் பிரசங்கம் செய்தார். 'நீங்கள் எல்லோரும் சைவப் பிள்ளைகள் மச்சமாமிசம் சாப்பிடக் கூடாது. அது பாவம்' என்றார். பாடசாலை விட்டதும் ஓட் டமும் நடையுமாக வீட்டுக்குப் போய் அம்மாவிடம் இவ் விடயத்தைக் கூறி இனிமேல் மச்சமாமிசம் சாப்பிட மாட்டேன் என்று முடிவு செய்தேன். நூறு பிள்ளைகள் படித்த பாடசாலையில் எனக்கு மட்டுமே பிரசங்கம் பயன் பட்டது. சிறு வயதிலேயே கடவுள் பெரிய பாவச் செயலில் இருந்து என்னைக் காப்பாற்றிவிட்டார்.

ஐந்து வயதில் எனது தகப்பனார் சிங்கப்பூருக்கு உழைக்கப் போய்விட்டார். எனது பத்தாவது வயதில் அவர் சிங்கப்பூரில் இறந்துவிட்டார். வருவாய் எதுவுமே இல்லை. எனது தாயார் அரிசி குற்றி வியாபாரம் செய்தே பிள்ளைகளைக் காப்பாற்றினார். சுப்பையா உபாத்தி யார் அம்மாவிடம் வந்து கந்தையா நல்லாகப் படிப்பார். அவரைப் படிப்பித்து விடும்படி கூறினார். ஆங்கிலம் படிக்க செலவு அதிகம். எனவே தாயார் என்னைத் தமிழ் படிக்க அனுப்பினார்.

எட்டாம் வகுப்பைப் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் படித்து ஆசிரிய தராதரபட்டமும் சித்தியடைந்தேன். எனது அதிபர் பண்டிதர் கா.பொ.இரத்தி னம் அவர்கள் பசித்த போதெல்லாம் உணவு தருவார். அவரே எனது குருவாக அமைந்தார். எனது படிப்பையும் பணிவையும் கண்ட பண்டிதர், தனது பாடசாலையில் என்னை மேலதிக ஆசிரியராகப் பணிபுரிய வைத்து மாதம் பத்து ரூபா சம்பளமும் தந்தார். இக்காலத்தில் நானாகவே படித்து ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சையில் மூன்று பாகங்களிலும் தேறினேன். பண்டிதர் ஐயாவின் உதவியால் உத்தியோகம் கிடைத்தது.

எனது பத்தொன்பதாவது வயதில் 1938 ஜனவரி மாதம் வவுனியாவில் உள்ள கருங்காலிக்குளம் அரசினர் பாடசாலைக்குக் கடமைசெய்ய சென்றேன். அங்கு இரு பத்து மூன்று பிள்ளைகளும் நானும் தான் இருந்தோம். இருவருடங்கள் அங்கு பணியாற்றினேன். வகுப்பு ஐந்து விவேகானந்தசபைப் பரீட்சைக்குப் பிள்ளைகளை அனுப்பி பரீட்சையில் சித்தியடைய வைத்து சமய அறி வையும் வளர்த்தேன்.

மூளாயில் படித்த போது எனது நண்பர் பேரின்பனார் என்னிடத்தில் சத்திய சோதனை என்னும் நூலைத் தந்து படிக்கச் சொன்னார். காந்தி அடிகளின் சுயசரிதம் ஆகிய இந்த நூல் எனக்கு மிகப் பிடித்துக் கொண்டது. சிறு வயதிலேயே வரவு - செலவுக் கணக்குகளை எழுதி வைக்கவும், நாட்குறிப்பு எழுதவும், காந்தி வழி நடக்கவும் இந்நூல் பெரிதும் உதவியது.” - இப்படிக் கூறுவார் காந்தி ஐயா.

**யாழ்ப்பாணத்துப் பணிகள்**

சுவாமி விபுலானந்தரால் கொக்குவிலில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை யில் 1946, 47 ஆம் ஆண்டுகளில் இவர் ஆசிரியராகக் கடமை ஆற்றினார். சுவாமி நடராஜானந்தா இந்நியம னத்தைச் செய்திருந்தார். இங்கு சுவாமி விபுலானந்தர், சுவாமி அசங்கானந்தா, சுவாமி நடராஜானந்தா ஆகி யோர் தங்கும் குடில் ஒன்றிருந்தது. அக்குடிலில்தான் இவர் குடியிருந்தார். அங்கு கந்தையா என்ற பெயருடன் மூன்று ஆசிரியர்கள் இருந்தனர். இந்தப் பின்புலத்தில் இவரது தனித்துவத்தை அவதானித்த மாணவர்கள் இவரைக் 'காந்தி ஐயா' என்று அழைத்தனர். அந்தப் பெயரின் பொருத்தம் கண்டு வியக்கிறோம். இந்தப் பெயரே இறுதிநாள்வரை நிலைத்தது.

இங்கு சேவையாற்றிய காலத்தில், மனோன்மணி அம்மன் கோயிலில் சதுர்க்கச்சேரி நடைபெறுவது கண்டு வேதனை அடைந்தார். அதனை நிறுத்த வேண்டி ஒருகிழமை உண்ணா விரதம் இருந்தார். ஈற்றில், கோயில் நிர்வாகத்தின் இணக்கத்துடன் சதுர்க்கச்சேரி நிறுத்தப்பட்டது.

1948ஆம் ஆண்டு மகாத்மா காந்தி அடிகள் மறைந் ததைத் தொடர்ந்து, காந்தீயத்தில் ஈடுபாடு கொண்ட அன் பர்கள் - ஹண்டி பேரின்பநாயகம், முதலியார் செ. சின் னத்தம்பி, பண்டிதர் துரைசிங்கம் தம்பதியர், திரு கோண மலை தியாகி இராஜகோபால், பேராசிரியர் கே.நேசையா, வித்துவான் கனகசபை, வித்துவான் சிவபாதசுந்தரம் சோ.க. தம்பிப்பிள்ளை - ஆகியோருடன் கூடி அகில இலங்கை காந்தி சேவா சங்கம் அமைப்பதில் ஆர்வம் காட்டினார். அச்சங்கத்தின் பொதுச்செயலாளராகப் பணி யாற்றினார்.

**கிண்ணியா மண்ணில் பணிகள்**

பெரியகிண்ணியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியாராகப் பணியாற்றியபோது, பாடசாலை செல்லா திருந்த இளைஞர்களை, காசிநாதர் ஆசிரியருடன் கைகோர்த்து வீடு வீடாகச் சென்று, வலியுறுத்தி, வர வழைத்து, கல்வி போதித்தவர் காந்தி ஐயா.

அப்போது அங்கு டி.ஆர்.ஓவாகக் கடமையாற்றிய குணரத்தினம், அன்றைய மூதூர் நாடாளுமன்ற உறுப் பினர் ஜனாப் முகமது அலி ஆகியோரின் உதவியுடன் கிண்ணியா வட்டாரத்தில் பத்து ஐக்கிய நாணய சங்கங் களையும், யூனியனையும் உருவாக்கியுள்ளார்.

காந்தி ஐயா கிண்ணியாவில் ஆற்றிய பணிகள்பற்றி அம்மண்ணின் மைந்தன் சட்டத்தரணி ஜனாப் இஸ் மாயில் கூறுவதைக் கேளுங்கள்:-

'கிண்ணியா மக்களால் மறக்க முடியாதவர் காந்தி ஐயா. இரண்டாவது உலக யுத்தம் ஏற்பட்டதன் காரணம ாக இலங்கையில் உணவுப் பொருள்களின் தட்டுப்பாடும், அவைகளின் உச்ச விலையேற்றமும் மக்களுக்குப் பெரும் கவலை அளித்தன. அவ்வேளையில் கிண்ணி யாவில் கடமையாற்றிய பொ.கந்தையா மாஸ்டர் போன்ற பெரியார்களின் தீர்க்க தரிசனத்தாலும், விடா முயற்சியாலும் கூட்டுறவுப் பண்டகசாலைகள் நிறுவப் பட்டன. அவைகள் இன்றுவரைக்கும் அப்பகுதி மக்க ளுக்கு உன்னத சேவை நிலையங்களாகப் பிரகாசிக்கின் றன.

அன்று கல்வியில் பின்தங்கியிருந்த கிண்ணியா பிரதேசத்தைத் தட்டி எழுப்பும் பரந்த மனப்பான்மையுடன் நமது அன்புக்குரித்தான த. காசிநாதர் (ஐயா) அவர்களின் தளபதியாக செயல்பட்டு கிண்ணியாவின் மூலை முடுக்கெல்லாம் சென்று கல்வியின் பெருமையை மக் களுக்கு எடுத்துக் கூறி, அப்பகுதியைத் திருகோண மலையின் ஏனைய பகுதிகளுடன் சரிசமமாக நின்று போட்டியிடும் அளவிற்கு உயர்த்திச்செயற்பட்ட கந்தையா மாஸ்டர் அவர்களை கிண்ணியா மக்கள் ஒரு போதும் மறக்க முடியாது.'

**தம்பலகாமப் பதியில் பணிகள்**

தம்பலகாமக் கிராமத்தில் ஒரு பெண்பாடசாலை ஆரம்பிக்கும் முயற்சியில் அரசாங்க பாடசாலை அதி பராக இருந்த பண்டிதர் வ. கதிரித்தம்பியுடன் இணைந்து பாடுபட்டார். இருவரும் முழுமூச்சாக ஈடுபட்டனர். கதி ரித்தம்பி ஆசிரியர் காட்டுக்குச் சென்று மரங்கள் கொண்டு வந்தார் என்று அறிகிறோம். பட்டிமேட்டில் காளியப்பு குடும்பத்தினர் அன்பளிப்புச் செய்த காணியில் இப்பாட சாலை அமைக்கப்பட்டது. காந்தி ஐயா ஓராண்டு ஊதி யத்தை பாடசாலைக்கு வழங்கினார். இவ்வாறு அமைக் கப்பட்ட சாரதா வித்தியாலய நிர்வாகத்தை இராமகிருஷ் ணமிஷன் பொறுப்பேற்றது.

**வன்செயல் காலத்து சமூகப் பணிகள்**

வன்செயல் வெடித்து திருகோணமலை மக்கள் அஞ்சி அலமந்து செய்வதறியாது திகைத்த வேளை, காந்தி ஐயா நாமுண்டு, நமது குடும்பமுண்டு என்று வாழவில்லை. மாறாக, அவர்களை நாடிச்சென்று ஆறு தல் கூறினார். உதவிக்கரம் நீட்டினார். அன்னார் ஆற் றிய பணிகளைத் திருகோணமலை மாவட்ட அபிவிருத் திச் சங்கத் தலைவர் எஸ்.லக்ஷ்மணன் பாராட்டுவதைப் பார்ப்போம்.

'1983ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தில் வன்செயல் காரணமாக சிறுபான்மை மக்கள் மிகவும் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டு மிகமோசமான சூழ்நிலை யில் வாழ்ந்தபோது, அவர்களின் துயரில் நாமும் பங்கு கொள்ள வேண்டுமென ஒருநிறுவனத்தை நாம் உரு வாக்கினோம். திருகோணமலை மாவட்ட அபிவிருத் திச் சங்கம் என்ற நிறுவனத்தை அன்று உருவாக்கிய ஒரு சிலரில் காந்தி ஐயாவும் ஒருவராவர்.

அன்றைய காலகட்டத்தில் பொதுசேவை என்றால் பொலிஸ், இராணுவ கெடுபிடியிருக்கும் என்ற பயத்தில் அநேகர் இவ்வாறான ஈடுபாடுகளைத் தவிர்த்திருந்த அக்காலத்தில், காந்தி ஐயா எம்முடன் இணைந்து, இம் மாவட்ட மக்களின் துன்பங்களில் பங்குகொண்டமை, அவரது மனித நேயப் பண்பையும், தைரியத்தையும் எடுத்துக் காட்டியது.

வயதான காலத்திலும், கஷ்டமான பிரயாணங்க ளுக்கிடையிலும், எம்முடன் கிராமங்களுக்கு வந்து, மக்களின் நிவாரண, மீள்டியேற்றப் பணிகளில் அவர் கலந்துகொண்டமை எமக்குப் பெரும்உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தருவதாக அமைந்தது.'

**திருமணத்தில் புதுமை**

திருகோணமலை 'தனசக்தி' இல்லத்தில் வாழ்ந்த நாள்களில் கழகப் புலவர் சிவசேகரனாரின் தாயார் தனது மூத்த மகள் பண்டிதை இராசநாயகி அவர்களின் திருமணம் பற்றி காந்தி மாஸ்டரிடம் பேசினார். அந்தக் காலத்தில் பண்டிதை இராசநாயகி கிண்ணியாவில் ஆசிரியப் பணிசெய்து கொண்டிருந்தார். பயிற்றப்பட்ட ஆசிரியையான அவர் ஆங்கில மொழியில் திறமையும் கைவரப் பெற்றிருந்தார்.


கழகப் புலவரின் தாயாரின் உரையாடலைத் தொடர்ந்து காந்தி மாஸ்டர் கிண்ணியாவில் இருந்த பண்டிதை இராசநாயகிக்கு உடனே கடிதம் ஒன்றை வரைந்தார். இல்லற தர்மத்தில் இவர் தன்னுடன் இணைந்தால் இவர் முகம்கொடுக்க வேண்டி வரும் துன்பங்களை நிரற்படுத்திக் கூறினார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# மூடிய அறைக்குள் ட்ரம்பின் முக்கிய செய்தியை கோட்டாபயவிடம் தெரிவித்துள்ளார் பொம்பியோ

## தனது தனிப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்தையும் வழங்கியுள்ளார்



கொழும்பு, நவ.01

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ, இலங்கைக்கான தனது விஜயத்தின்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்தவேளை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தனிப்பட்ட முக்கிய செய்தியை கோட்டாபயவிடம் தெரிவித்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

அமெரிக்க - இலங்கைப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது மைக் பொம்பியோ தான் இலங்கை ஜனாதிபதியுடன் சில நிமிடங்கள் மூடிய அறைக்குள் தனிப்பட்ட பேச்சுகளை மேற்கொள்வதற்கு விரும்பியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் அமெரிக்க ஜனாதிபதியின் தனிப்பட்ட செய்தியை மைக் பொம்பியோ கோட்டாபயவிடம் பகிர்ந்துகொண்டுள்ளார்.

ட்ரம்ப் நிர்வாகம் சிறிய நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்தும் விதத்தில் தனது வெளிவிவகாரக் கொள்கைகளில் மாற்றங்களை மேற்கொள்கின்றது என மைக் பொம்பியோ, கோட்டாபயவிடம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா பெரிய நாடுகளில் இருந்து தனது கவனத்தை சிறிய நாடுகளை நோக்கி திருப்பியுள்ளது எனவும் மைக் பொம்பியோ கூறியுள்ளார்.

இலங்கையுடன் நெருக்கமாக இணைந்து செயலாற்றுவது குறித்து அமெரிக்கா ஆர்வமாகவுள்ளது எனத் தெரிவித்துள்ள மைக் பொம்பியோ இலங்கையில் அமெரிக்க நிறுவனங்களை முதலீடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளவுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

ஏதாவது விசேட தொழில்துறைக்கு அமெரிக்காவின் உதவி தேவைப்படுகின்றதா என மைக் பொம்பியோ கோட்டாபயவிடம் கேட்டுள்ளார்.

நாட்டின் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று கோட்டாபய தெரிவித்துள்ளார்.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட மாநிலமான கன்சாஸ் மூலம் அரசியலில் நுழைந்த தனக்கு நாட்டுக்கு பேண்தகு விவசாயத் தொழில்துறையின் முக்கியத்துவம் தெரியும் என்று மைக்பொம்பியோ தெரிவித்துள்ளார்.

இராணுவப் பின்னணியைக் கொண்ட மைக் பொம்பியோ, கோட்டாபயவின் இராணுவ அனுபவங்கள் குறித்து கேட்டறிந்துள்ளார். கோட்டாபய தனது வாழ்நாளில் அமெரிக்காவில் இராணுவப் பயிற்சிஎதையாவது பின்பற்றியிருக்கின்றாரா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கோட்டாபய தான் அமெரிக்காவின் போர்ட் பெனிங் இராணுவப் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்றார் எனத் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட போர்ட் பெனிங் கல்லூரிக்கு மைக் பொம்பியோவும் சென்றுள்ளார்.

பொதுவான விருப்பங்கள் காரணமாக நட்புறவை மேலும் வளர்த்துக் கொண்டமைக் பொம்பியோ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தொடர்ந்தும் தொடர்பில் இருப்பார் எனத் தெரிவித்துள்ளமையுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான அபிவிருத்தி ஒத்துழைப்பு குறித்து மேலும் பேச்சில் ஈடுபடுவார் எனவும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ தனது தனிப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்தையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இந்தச் சந்திப்பின்போது வழங்கியுள்ளார்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் நாற்பது பேருக்குத் கொரோனாத் தொற்று

மட்டக்களப்பு, நவ.01

மட்டக்களப்பு - கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேலும் ஐந்து பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பகுதியை சேர்ந்த மூவரும், பிறைந்துரைச்சேனை பகுதியை சேர்ந்த ஒருவர், மாவடிச்சேனை பகுதியை சேர்ந்த ஒருவரும் என ஐவருக்கே இவ்வாறு தொற்று உறுதியானது.

குறித்த நபர்கள் வாழைச்சேனை மீன் பிடி துறைமுகத்தில் தொழிலுக்கு சென்ற வரும், கொரோனா தொற்றில் சிகிச்சை பெற்று வருபவர்களின் குடும்ப உறுப்பினர்களுமாவர்.

இதன்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 40 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் 36 பேரும், முறக்கொட்டாஞ்சேனை பிர தேசத்தில் ஒருவருக்கும், களுவாஞ்சிக் குடி பொலிஸ் பிரிவில் இருவரும், கொக்கட்டிச் சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிமுன்மாரி பகுதியில் ஒருவருக்குமாக கொரோனா தொற்றுக்கு கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது

## கொரோனாத் தொற்றாளரைக் கண்காணித்த சுகாதார வைத்திய அதிகாரி திடீர் உயிரிழப்பு



களுவாஞ்சிக்குடி மற்றும் வெல்லாவெளி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் சீனித்தம்பி கிருஷ்ணகுமார் இன்று அதிகாலை திடீரென உயிரிழந்துள்ளார்.

இவர் நேற்றுக்கூட களுவாஞ்சிக்குடிப் பகுதியில் கொரோனாத் தொற்றாளர் ஒருவரைக் கண்காணித்துவிட்டேவந்திருக்கின்றார்.

இவரின் மாதிரி பி.சி.ஆர். பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கல்முனை, பாண்டிருப்பைச் சேர்ந்த இவர், 3 பிள்ளைகளின் தந்தையாவார். மகனொருவர் மருத்துவபீட மாணவராவார்.

கல்முனைப் பிராந்திய தமிழ், முஸ்லிம் மக்களின் மனங்களில் நீங்கா இடம் பிடித்த வைத்தியர் கிருஷ்ணகுமார் தனது 60ஆவது வயதில் காலமாகியுள்ளார்.

இவர் களுவாஞ்சிக்குடி மற்றும் வெல்லாவெளி பிரிவில் பொறுப்பு வாய்ந்த வைத்திய அதிகாரியாக இருந்து போரைதீவுப்பற்று பிரதேசத்திலுள்ள கிராமங்களில் கொரோனாத் தொற்றைத் தடுப்பதில் மிகவும் காத்திரமாகப் பணிபுரிந்து மக்களால் நேசிக்கப்பட்ட வைத்தியராவார்.

மக்கள் நேசித்த மனித நேயம் கொண்ட சிறந்த மனிதரான இவரது திடீர் இழப்பு மக்களுக்குப் பேரிழப்பாகும்.

## தாய்க்குக் கொரோனா பரிசோதனை; மன உளைச்சலில் மகன் தற்கொலை!

### கொழும்பில் சோகச் சம்பவம்

கொழும்பு, நவ.01

கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனை செய்ய பெண் ஒரு வரை சுகாதார அதிகாரிகள் அழைத்துச் சென்றமையால் மன உளைச்சலுக்கு உள்ளாகிய 25 வயது மகன் தற்கொலை செய்துகொண்ட சோகச் சம்பவம் கொழும்பில் இடம் பெற்றுள்ளது.

ஹோமாகம, தோலவத்த பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் மஹரகமவில் உள்ள மீன் கடையில் கொள்வனவு செய்திருக்கிறார்.

அந்த மீன் விற்பனை நிலையத்துடன் தொடர்பான பலருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளது.

இதனால் குறித்த பெண்ணும் களுபோவில வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டபோது மன அழுத்தத்திற்கு உள்ளாகிய அவரது விசேட தேவையுடைய மகன் வீட்டிலேயே தற்கொலை செய்து கொண்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## சலூனுக்குச் சென்று முடி வெட்டிய 125 பேர் தனிமைப்படுத்தலில்!

கொழும்பு, நவ.01

சிகை அலங்கார நிலையம் ஒன்றின் உரிமையாளருக்கு கொரோனா வைரஸ் தொற்றி இருப்பது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது என கஹாத்துடுவ பிரதேசத்தில் பிரதேச சுகாதாரபிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த சிகை அலங்கார நிலையம் மூடப்பட்டுள்ளதுடன் சிகை அலங்காரம் செய்துக் கொண்ட 125 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பேலியகொடை மீன் சந்தையில் மீன் கொள்வனவு செய்த கஹாத்துடுவ மீன் வியாபாரி ஒருவர் இந்த சிகை அலங்கார நிலையத்திற்கு வந்து சென்றுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

அவர் மூலம் சிகை அலங்கார நிலையத்தின் உரிமையாளருக்கு கொரோனா வைரஸ் தொற்றி இருக்கலாம் என சுகாதாரத் துறையினர் தெரிவிக்கின்றனர்.

## தொலைபேசி மூலம் தொற்றுத் தொடர்பில் வைத்திய ஆலோசனை

கொழும்பு, நவ.01

கொரோனா தொற்று நோய் தொடர்பான அறிகுறிகள் காணப்பட்டால் வைத்தியசாலைக்கு செல்வதற்கு முன்னர் 011-7966366 என்ற இலக்கத்திற்கு அழைத்து கொவிட் நோய் தொடர்பில் வைத்திய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள முடியும் என சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

விசேட அறிவிப்பொன்றை மேற்கொண்டு அவர் இதனை தெரிவித்துள்ளார்.

## மறு அறிவித்தல் வரும்வரை பாடசாலைகளுக்குப் 'பூட்டு'

கொழும்பு, நவ.01

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் மறு அறிவித்தல் வரை திறக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. அனைத்துப் பாடசாலைகளும் எதிர்வரும் 9ஆம் திகதி கல்வி நடவடிக்கைகளுக்காகத் திறக்கப்பட இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(மற்றொரு செய்தி 04ஆம் பக்கத்தில்)

## வவுனியாவில் வெடிபொருள்கள் மீட்பு

வவுனியா, நவ.01

வவுனியா - இராசேந்திரங்குளம் பகுதியில் இருந்து துப்பாக்கி மற்றும் கைக் குண்டுகளைப் பொலிஸார் இன்று மீட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் ஆயுதங்கள் இருப்பதாக தேசிய புலனாய்வுப் பிரிவிற்குக் கிடைத்த தகவலிற்கமைய நீதிமன்ற அனுமதியுடன், அப்பகுதிக்கு சென்ற வவுனியாப் பொலிஸார் மண் அகழ்வதற்குப் பயன்படும் இயந்திரம் மூலம் நிலத்தைத் தோண்டி தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.



இதன்போது மண்ணில் புதையுண்ட நிலையில் காணப்பட்ட ரி56 ரக துப்பாக்கி மற்றும் 6 கைக்குண்டுகள் மற்றும் இரண்டு மகஸின்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட கைக்குண்டுகள் விசேட அதிரடிபடையினரால் செயலிழக்க செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக பயணிக்கவேண்டும்

## உலமாக் கட்சி கோரிக்கை




கல்முனை தமிழ் உப பிரதேச செயலகத்தை நீக்கி பொது பிரதேச செயலகத்தின் ஊடாக தமிழ் முஸ்லிம்கள் பயணிக்க வேண்டும் என உலமா கட்சி தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

கல்முனையில் அமைந்துள்ள உலமா கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் சிறுபான்மை சமூகம் என்பதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை. சிறுபான்மையினருக்கு எம்மை பொறுத்தவரை தனிக்கட்சி ஒன்று தேவை என்ற விடயத்தில் உறுதியாக உள்ளோம்.

பேரினவாத கட்சிகளுக்கு அடிமைகளாக இருக்க கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே நாம் உள்ளோம். சில நேரம் சமூக நலனை அடிப்படையாகக் கொண்டுசிறுபான்மைக்கட்சிகளாகியநாம்இணைந்து செயற்பட்டுள்ளோம்.

தற்போது 20 ஆவது அரசியல் சீர்திருத்தத்துக்கு முஸ்லீம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கி விட்டார்கள் என்பதற்காக சிறுபான்மை விடயத்தில் முஸ்லீம்கள் தலையிட முடியாது என சிலர் கூறி வருகின்றார்கள். ஆனால், மலையகக் கட்சிகளும் கூட இவ்வாறான சில விடயங்களில் பேரினவாத கட்சிகளுடன் இணைந்தே செயற்படுகின்றனர்.

எனவே தான் சிறுபான்மையினராகத் தற்போது தமிழர்கள் மாத்திரம் தான் உள்ளனர் எனக் கூறுகின்றமை அரசியல் விளக்கமில்லாதவர்கள் கூறுகின்றமை போன்றதாகும். தமிழ், முஸ்லீம் அரசியலில் கல்முனை என்பது முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

கடந்த காலங்களில் கல்முனை விடயத்தை வைத்து முஸ்லீம் காங்கிரஸும் தமிழ் கட்சிகளும் அரசியல் செய்கின்ற விடயத்தை சுட்டிக்காட்டி இருந்தோம். கல்முனை பிரச்சினை ஏற்படுவதற்கு காரணம் உப செயலகம் இருப்பதால் ஆகும்.

எனவே, தமிழ் உப பிரதேச செயலகத்தை நீக்கி பொது பிரதேச செயலகத்தின் ஊடாகத் தமிழ் முஸ்லிம்கள் பயணிக்க வேண்டும். எனவே, அரசியல் வாதிகள் கல்முனையை இனிவரும் காலங்களில் விளையாட்டாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

இதனை வைத்து எவரும் அரசியல் செய்யத் தேவையில்லை. கடந்த நல்லாட்சி அரசில் முஸ்லிம் கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இணைந்து ஆட்சிக்கு முட்டு கொடுத்திருந்தனர். அவ்வாறாயின் ஏன் கல்முனை பிரச்சினையை இதவரை தீர்க்க முடியவில்லை.

உங்கள் அரசியல் நடவடிக்கைக்காக மக்களிடம் விளையாடுகிறீர்களா எனக் கேட்க விரும்புகின்றேன். இப்போது கலையரசன் எம்.பி கூட கல்முனையைக் காப்பாற்றுவதாகக் கூறுகின்றமையானது மக்களை அவரும் கட்சியும் ஏமாற்ற முயற்சிப்பதாகும்.

இதே போன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸூடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது சுமந்திரனோ ஏதாவது உடன்படிக்கை செய்து அரசியலை முன்னெடுத்துள்ளனரா என்றால் இல்லை. இவ்வாறு எந்தவோர் உடன்படிக்கையும் செய்யாத நிலையில் சுமந்திரன் முஸ்லிம் காங்கிரஸை எவ்வாறு இணைந்து செயற்படுமாறு கூறுவார் எனக் கேட்க விரும்புகின்றேன்.

இந்த நாட்டில் சிங்களக் கட்சிகள் மற்றும் தமிழ்க் கட்சிகளிடையே பல ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், தமிழ் முஸ்லிம் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் கட்சிகளும் ஏன் உடன்படிக்கை எதையும் செய்வதில்லை.

.ஒப்பந்தங்கள் எதுவும் இல்லாமல் பயணித்து விட்டு சுமந்திரன் தற்போது முஸ்லீம் காங்கிரஸை விமர்சிப்பது ஏன்? முஸ்லிம் காங்கிரஸின் அனைத்து விடயங்களையும் அறிந்த சுமந்திரன் கொக்கரிப்பதில் அர்த்தமில்லை. - எனக் கூறினார்.

# சுயதனிமைப்படுத்தலில் இருந்த வயோதிபர் மன்னாரில் சாவு!

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

தலை மன்னார் பியர் பகுதியில் சுயதனிமைப் படுத்தலில் வைக்கப்பட்டிருந்த முதியவர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை உயிரிழந்துள்ளார் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தெரிவித்தார்.

அந்த நபர் கடந்த 23 ஆம் திகதி கொழும்பு கொச்சிக் கடை பகுதியில் இருந்து மன்னாருக்கு வந்த நிலையில், தலைமன்னார் பியர் பகுதியில் உள்ள அவரது வீட்டில் சுயதனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்று காலை அந்த வயோதிபர் உயிரிழந்துள்ளாரென குடும்பத்தார் அறிவித்தனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

76 வயதுடைய முதியவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

வயோதிபரின் மரணம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சடலம் பீ.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பின்னர் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் மேலும் தெரிவித்தார்.

# யாழில் நவீன கடலுணவு பதனிடும் தொழிற்சாலை!



அன்னை அன் சன்ஸ் தனியார் நிறுவனத்தின் ஏற்றுமதிக்கான கடலுணவு பதனிடும் தொழிற்சாலை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்தத் தொழிற்சாலை ஊடாக முதற்கட்டமாக சுமார் 350 பிரதேச இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளமையுடன் நாளாந்தம் சுமார் 2 ஆயிரம் கிலோகிராம் கடலுணவுகள் பதனிடப்பட்டு ஏற்றுமதி செய்யப்படவுள்ளன.

இவ்வாறான திட்டங்களால் வடக்கில் உள்ள கடற்றொழிலாளர்கள் பல நன்மைகளைப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடுகளில் சிக்கியோரை அழைத்து வருவதில் தாமதம்!

தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வரும் நடவடிக்கை மேலும் தாமதமடையும் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமையால் இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளதாகப் பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மங்கல ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்களை இழந்து தங்கியுள்ள இலங்கையர்களுக்கு அந்த நாடுகளின் சட்டத்தின் கீழ் புதிய தொழில்களைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாக ஆராயுமாறு தூதரகங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

புதிய முகவர்களினூடாக அது தொடர்பாக ஆராயுமாறு கோரியுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்களை இழந்து 20 ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் தங்கியுள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் மங்கலரந்தெனிய கூறியுள்ளார்.

# 1,600 குடும்பங்களின் நடமாட்டத்தினை மகரகமவில் கட்டுப்படுத்த நடவடிக்கை!

மகரகமவில் 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இதுவரை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால், மஹரகம நகரசபைக்கு உட்பட்ட மிரிஹானை - பிரகதிபுர, வெல்சிரிபுர மற்றும் ராகுலாபுர பகுதிகளில் கிட்டத்தட்ட 1,600 குடும்பங்களின் நடமாட்டத்தை முற்றிலுமாகக் கட்டுப்படுத்த சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பேலியகொட மீன் சந்தையுடன் தொடர்புடைய 12 மீன் வர்த்தகர்கள், இந்த கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என மகரகம நகராட்சி மன்ற உறுப்பினர் ஞானசிறி தயானந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அந்தப் பகுதியை முற்றிலுமாக கிருமி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.

# பி.சி.ஆர். இயந்திரம் திருத்தம் முடிவடைந்து சேவை வழமைக்கு

## இலங்கை வந்த சீனக்குழு தெரிவிப்பு

கொழும்பு, நவ.02

முல்லேரியா வைத்தியசாலையில் செயலிழந்துள்ள பி.சி.ஆர். இயந்திர திருத்தப்பணியை இன்று நிறைவு செய்ய முடியுமென இலங்கைக்கு வருகை தந்துள்ள சீன குழு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான சீன தூதரகம் தனது ருவிட்டர் பக்கத்தில் இதனைத் தெரிவித்துள்ளது.

பி.சி.ஆர். இயந்திரத்தின் தானியங்கி மூலக்கூறு பிரித்தெடுத்தலுக்கான கூறு, ஓரளவு விலகி இருந்ததாக சீனாவிலிருந்து வருகை தந்துள்ள தொழில்நுட்ப வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

பி.சி.ஆர். இயந்திரம் சுமார் 10 மணி நேரம் முன்னெடுக்கப்பட்ட திருத்தப் பணிகள் காரணமாக சீர்செய்யப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே, இன்று முதல் பி.சி.ஆர். இயந்திரத்தின் செயற்பாடுகள் வழமை போல் இயங்கும். - என அவர்கள் தெரிவித்தனர்.

# 24 மணி நேரத்தில் 153 பேர் கைது!




தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் 153 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இதன்போது 35 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

அத்தோடு, முகக் கவசம் அணியாத மற்றும் கொரோனாவுக்கான சுகாதார பாதுகாப்பு ஆலோசனைகளைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் 61 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம் பொலிஸாரால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவுகளைப் புறக்கணித்து மேல் மாகாணத்தை விட்டு வெளியேறிய குற்றச்சாட்டில் 550 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியாவின் பாதுகாப்புக்கு எதிரான செயற்பாட்டை தமிழ் மக்கள் ஏற்கார்!

## சுரேஷ் பிறேமச்சந்திரன் காட்டம்

யாழ்ப்பாணம், நவ.02

7 கோடிக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் வாழும் இந்தியாவின் பாதுகாபபுக்கு, குந்தகம் விளைவிக்கக்கூடிய எந்தச் செயற்பாடுகளையும் இலங்கைத் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையைக் கருத்திற்கொண்டு, தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கும் சகல கட்சிகளும் ஒருமித்து செயற்பட வேண்டியது காலத்தின் தேவையென சுரேஷ் பிறேமச்சந்திரன் மேலும் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் விடயங்கள் தொடர்பில் நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்து பசுபிக் பிராந்தியத்தில் தனது இராணுவ மேலதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்ள சீனா எடுத்திருக்கும் முயற்சிகளும், சீனாவின் மையப்புள்ளியாக ஒரு முக்கியமான இடத்தில் இலங்கை இருப்பதால், இலங்கையைப் பயன்படுத்துவதற்கு சீனா எடுக்கும் முயற்சிகளும், இவை வெறுமனே ஒரு பொருளாதார அடிப்படையில்தான் உறவுகள் இருக்கும் என்று கூறுவதும் கூட, 99 வருட குத்தகைக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு கொடுத்திருக்கின்ற அடிப்படையில் இலங்கையினுடைய நிலைப்பாடுகள் தொடர்பாக அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் கவலை கொண்டிருக்கின்றன.

இது வெவ்வேறு பிரச்சினைகளுக்கும் வழிவகுக்கும் எனவும் அவர்கள் நம்புகின்றார்கள். அந்த வகையில் அமெரிக்கா யோசிக்கின்றது, இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் இருக்கக்கூடிய இவ்வாறான நிலைகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும். இந்த விடயத்தை வெளிப்படையாக இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ கூறியிருக்கின்றார்.

இதே போன்று இந்தியாவும் கூட இலங்கை எடுத்திருக்கும் இவ்வாறான நடவடிக்கைகளால், சீனா தொடர்பில் இலங்கை கொண்டிருக்கின்ற கருத்துருவாக்கங்கள், இலங்கை மண்ணை சீனாவினுடைய தேவைகளுக்கு இலங்கை அரசாங்கம் கொடுத்திருக்கின்ற நிலைமை இந்தியாவிலும் ஒரு பாதுகாப்பு தொடர்பான கவலைகளை ஏற்படுத்தி இருக்கின்றது.

இலங்கை அரசாங்கம் இவ்வாறான விடயங்களைச் செய்துகொண்டு போவதென்பது நிச்சயமாக இலங்கையினுடைய ஸ்திரத் தன்மைக்குப் பாதிப்பாகும். இலங்கை பொருளாதாரத்தில் தன்னை வளர்த்துக்கொண்டு போக வேண்டுமானால் அரசியல் ஸ்திரத் தன்மை பேணப்பட வேண்டும்.

ஆனால் இலங்கை தானாக வலிந்து சில பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றது என நான் கருதுகின்றேன்.

இந்த நிலையில், நிச்சையமாக இலங்கையில் இருக்கக்கூடிய தமிழ் மக்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும்கூட, அவர்களது நிலைப்பாடுகள், இது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கு என்ன விடயங்களைச் சொல்லப் போகின்றார்கள், அது மாத்திரம் அல்ல இந்தியாவினுடைய நீண்ட கால நட்பாக இருக்கக் கூடிய இலங்கைத் தமிழ் மக்கள் இந்தியாவினுடைய பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படாத வகையில் எவ்வாறு நடந்துகொள்ளப் போகின்றார்கள், இந்த விடயத்தை எவ்வாறு இந்தியாவிடம் கலந்துரையாடப் போகின்றார்கள் என பல பிரச்சினைகள் இருக்கின்றன.

குறிப்பாக வடக்கு, கிழக்கு என்பது இந்தியாவுக்கு அண்மையில் உள்ள பிரதேசம் என்பதும், இதற்குள் சீனா வெவ்வேறு பொருளாதார அபிவிருத்தி போன்ற வற்றைக் காட்டி வருவதென்பதும் இந்தியாவுக்கு மேலும் பாதிப்பைத்தான் உருவாக்கும்.

இதனை இலங்கை அரசு ஏற்படுத்தக் கூடாது, தமிழ் அரசியல் கட்சிகள் இது தொடர்பாக மிகத் தெளிவான சிந்தனைக்கு வரவேண்டும்.

எமக்கு மிக அண்மையில் இருக்கக்கூடிய அண்டை நாடு மற்றும் நட்பு நாடு இந்தியா, 7 கோடிக்கு மேற்பட்ட



தமிழ் மக்கள் இருக்கக்கூடிய நாடு இந்தியா.

அவ்வாறானதொரு நாட்டினுடைய பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய வகையிலான எந்த செயற்பாடுகளையும் இலங்கைத் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

அந்த வகையில் இப்போது ஏற்பட்டுக்கொண்டு வருகின்ற பிரச்சினையென்பது, ஒரு பாரதூரமான நிலைக்கு இலங்கை அரசாங்கம் இந்த நாட்டை உட்படுத்துகின்றது என்ற அச்சம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

ஆகவே, இலங்கை அரசாங்கம் இதனை எவ்வாறு சீர் செய்யப்போகின்றது என்ற பிரச்சினை இருக்கின்றது. அதே வேளை இலங்கைத் தமிழ் மக்கள் உறுதியான சில நிலைப்பாடுகளை எடுத்து, தம்மைப் பாதுகாப்பது மாத்திரமல்ல, தம்மைப் பாதுகாப்பதன் ஊடாக இந்தியாவினுடைய பாதுகாப்புக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தலுக்கு எதிராகவும் தமிழ் மக்கள் செயற்படவேண்டும் எனும் தேவை வந்திருப்பதாக நான் கருதுகின்றேன்.

இதனை தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கும் சகல கட்சிகளும் ஒருமித்த முடிவாக எடுத்து செயற்பட வேண்டியது காலத்தினுடைய தேவையாக இருக்கின்றது. - எனவும் தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சியில் கடும் வறட்சி குடிதண்ணீருக்கு மக்கள் அவதி!

கிளிநொச்சி, நவ.02

கிளிநொச்சியில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக குடிதண்ணீர் உள்ளிட்ட தேவைகளுக்காக சில பகுதிகளில் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி, பச்சிலைப்பள்ளி, கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்தப் பிரச்சினை நிலவுகின்றது. மழைவீழ்ச்சி இதுவரை கிடைக்காமையால் மக்கள் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட விநாயகபுரம் பகுதியில் நிலத்தடி நீர் வற்றியுள்ளது. அப்பகுதியில் வாழும் 450 புடும்பங்களில் 200 குடும்பங்கள் வரை குடிதண்ணீர் உள்ளிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கின்றனர். இந்தக் குடியிருப்பின் ரயர்கடை சந்தி எனக் கூறப்படும் பகுதியில் 35 அடிக்கு மேல் ஆழம் கொண்ட கிணறுகள் வற்றி வறண்டு காணப்படுகின்றன. இதனால் குடிதண்ணீர் தேவைக்காக நீண்ட தூரம் செல்ல வேண்டி உள்ளதாகவும், குளிப்பதற்கு அருகில் உள்ள குளத்துக்குச் செல்கின்றனர் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தப் பகுதியில் அமைந்துள்ள குளத்தின் நீரும் வற்றியுள்ளமையால் சேறும் சகதியுமான நிலையில் நீராடவேண்டி உள்ளதாகவும் தெரிவிக்கும் மக்கள், அப்பகுதியில் முதலைகளின் அச்சுறுத்தலும் காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர். இவ்வாறான நிலையில் பெரும் சிரமங்களை விநாயகபுரம் மக்கள் எதிர்கொள்கின்றனர் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

வருடம் தோறும் இந்தக் காலப்பகுதியில் இவ்வாறான பிரச்சினையைத் தாம் எதிர்கொள்கின்றனர் எனவும், இந்தக் காலப்பகுதியில் தமக்கான குடிதண்ணீர் உள்ளிட்ட தேவைகளுக்காக நீர் விநியோகத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துத் தருமாறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அதேவேளை குடிதண்ணீருக்காக அப்பகுதியில் பொதுக் கிணறுகளை அமைத்தும், இருக்கின்ற பொதுக் கிணறுகளை ஆழமாக்கியும் கொடுப்பதன் ஊடாக கணிசமான அளவு நீர் தேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது காணப்படும் வறட்சியான நிலை காரணமாக தமது பிரதேசத்தில் குடிதண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாது உள்ளதாகவும், கால்நடைகள் உள்ளிட்டவையும் பாதிப்படைந்துள்ளன எனவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், பிரதேச சபையினரும் தமது பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள தற்போதய நிலையை அறிந்து விரைவான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் தமது பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

# 105 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதி!

இலங்கையில் 105 பொலிஸ் அதிகாரிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தெமடகொடவிலுள்ள கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவில் பெண் அதிகாரி ஒருவர் உட்பட இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதற்கமைய, கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் இதுவரையில் 26 பொலிஸ் அதிகாரிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையில் நாளுக்கு நாள் கொரோனா வைரஸ் தொற்றுக்குஉள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.


அதிலும் கம்பஹா மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளிலேயே கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகம் காணப்படுவதாகவும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொற்றில் சாதாரண பொது மக்கள் மட்டுமன்றி வைத்தியர்கள், தாதியர்கள், பொலிஸ் அதிகாரிகள், உயரதிகாரிகள் ஆகியோரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் கொரோனா தொற்று கண்டறியப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 663 ஆக காணப்படுகின்றது. இவர்களில், நான்காயிரத்து 399 பேர் வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளமையுடன் இன்னும் ஆறாயிரத்து 244 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இலங்கையில் இதுவரை 20 பேர் கொரோனா தொற்றால் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊரடங்கு அமுலில் உள்ள பகுதி மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா உதவி!



ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதியில் வறுமைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்கப்படும் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 பரவலைக் கட்டுப்படுத்தும் செயலணியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம் மேல் மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு நவம்பர் 9 ஆம் திகதி காலை 5 மணி வரை தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்குக் கடத்தத் தயாராகவிருந்த 2 ஆயிரம் கிலோ மஞ்சள் சிக்கியுள்ளது!

இந்தியாவின் தனுஸ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு படகு மூலம், கடத்த முயன்ற 2 ஆயிரம் கிலோ சமையல் மஞ்சள் அடங்கிய 75 மூடைகளை நடுக்கடலில் வைத்து நாட்டுபடகுடன் இந்திய கியூ பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

மண்டபம் வடக்கு மீன் பிடி துறைமுகம் அருகே கரையில் உரிய பதிவு எண் இல்லாத நாட்டு படகு ஒன்று நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டிருந்தமையை அவதானித்த கியூ பிரிவு பொலிஸார், படகில் ஏறி சோதனை செய்தபோது, படகில் இலங்கைக்கு கடத்துவதற்காக மூடை மூடையாக மஞ்சள் படகில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது.

இதனையடுத்தது கியூ பிரிவு பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் நாட்டுபடகு தங்கச்சி மடத்தைச் சேர்ந்தது என முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய கடத்தல்காரர்களைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர் எனவும் விரைவில் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் எனவும் கியூ பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் கைப்பற்றப்பட்ட மஞ்சளின் இலங்கை பெறுமதி சுமார் 65 லட்சம் என கியூ பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.



## கர்மயோகி காந்தி....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய பெண்களுக்கு ஏற்படாத சில இடர்கள் தனது துணைவியாருக்கு ஏற்படும் என்றும், சில தியாகங்களைச் செய்ய வேண்டிய நேரிடும், இவற்றைச் செய்ய சித்தமாய் இருக்க வேண்டும் என்றும், தன் கரம் பற்றவுள்ள இராசநாயகி அம்மையாருக்குக் கோடிட்டுக் காட்டினார். அதுமட்டுமன்றி ஒரு வேளை சந்திரமதியின் வாழ்வும் தனது துணைவியாருக்கு ஏற்படலாம் என்று எச்சரிக்கை செய்யவும் தவறவில்லை.

இம்மடல் கண்டதும் பண்டிதை இராசநாயகி எழுதிய பதில் என்ன தெரியுமா? 'அன்னை சாரதாதேவி, அன்னை கஸ்தூரிபாய் போன்று இல்லறத்தில் உங்களுக்குத் தொண்டாற்றி உங்களின் தொண்டுக்குப் பரிபூரண ஒத்துழைப்பு வழங்குவேன்' என்று உறுதியுரை கூறினார்

காந்தி ஐயா – இராசநாயகி திருமணத்தில் பல புதுமைகளைக் கண்டோம். கதர்நூற் சேலையை மணமகள் கூறையாக அணிந்தார். சர்வோதய முறைப்படி திருமணம் நிகழ்ந்தது. திருமண நாள்அன்று திருக்கோண மலையில் திருக்குறள் மகாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்த காரணத்தினால் அம்மாநாட்டில் பங்கு பற்றிய தமிழக அறிஞர்கள் பலரும் இவர்கள் திருமண விழாவிற்கு கலந்து கொள்ளத் தவறவில்லை.

இத் திருமணவிழாவில் தேநீர், சோடா போன்ற பானங்கள் தவிர்க்கப்பட்டு தோடம்பழச் சாறு பரிமாறப்பட்டது. அன்னதானம், வஸ்திரதானம், வித்தியாதானம் இடம் பெற்றன.

காந்திஐயாவின் நண்பரான ஆத்மா ஜோதி முத்தையா திருமுறைகளை ஓதி கவியோகி சுத்தானந்த பாரதியாரின் பாடல்களைப் பாடினார். காந்தி ஐயா – இராசநாயகி சர்வோதயத்திருமண வைபவத்தில் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா.முத்தையா பாடியது கவியோகி சுத்தானந்தரின் பாடல்கள். சுத்தானந்தர் பாடிய பாரத மகாகாவியத்தில் இல்லற ஒழுக்கம் பற்றிய பாடல்கள் கருத்தாழமும், கவி நயமும் மிக்கவை.

காந்தி ஐயாவின் குரு கா.பொ. இரத்தினம் அவர்கள் தலைமையுரை ஆற்ற தமிழக அறிஞர்கள் பலர் கலந்து கொண்டு தம்பதிகளை வாழ்த்தினார்கள்.

சாதி, குல வேறுபாடுகளை கடந்த சிந்தனைப் போக்குடையவர் காந்தி ஐயா. 'சாதி, குலம், பிறப்பெனும் சுழிபட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேன்' என்று அருளாளர்கள் பாடியிருக்கிறார்கள். 'சாதிகள் இல்லையடி பாப்பா., குலத்தாழச்சி உயர்ச்சி சொலல் பாவம்' என்று பாடினான் பாரதி. அவ்வாறு காந்தீய வழியில் சாதி வேறுபாடுகளைச் சாடுபவர் காந்தி ஐயா. ஹரிஜனங்கள் போகாத கோயில்களுக்கு போவதில்லை என்று பிடிவாதமாக இருந்தவர்.

### புத்தக வியாபாரத் தொண்டு

இவர் புத்தகங்களையும் சமயப் பத்திரிகைகளையும் விற்பதை ஒரு தொண்டாகச் செய்து கொண்டிருந்தார். கோயில் திருவிழாக்களில் ஒரு புறத்தே அமர்ந்து நூல்களை விற்றார். வாசிப்புப் பழக்கங்களை மக்களிடையே – குறிப்பாக சிறார்கள் இளைஞர்கள் மத்தியில் – பரப்ப வேண்டும் என்ற வேட்கையுடையவர்.

இதுபற்றி அவரே கூறுகிறார்:–

'அறிவு குன்றியதால்தான் உலகம் துன்பத்திற்கும் துயரத்திற்கும் ஆளாகிக் கொண்டிருக்கிறது. நல்ல நூல்களைப் படித்து அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம். இந்த நம்பிக்கையில்தான் நான் புத்தக விற்பனையை ஒருமுக்கிய தொண்டாகக் கருதிச் செய்கிறேன். வசதி படைத்தோர் நல்ல நூல்களை அச்சிட்டு மலிவான விலைக்கு கொடுக்க வேண்டும்.

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான். வீடுகளில் உடுப்புக்குவியல், பணக்குவியல், பவுண் குவியல், தளபாடக்குவியல், ஆடம்பரப் பொருள் குவியல் எல்லாம் உள்ளன. ஆனால் புத்தகக் குவியல் இல்லை. புத்தகங்கள் நிறையப் படித்து அதன்படி ஒழுகும்போது நாட்டில் சமாதானம், சந்தோம், ஆனந்தம் நிறையும்'.

### காந்தி ஐயாவின் கால முகாமைத்துவம்

'காலத்தை, நேரத்தை முகாமைத்துவம் செய்வதில் மனிதன் சிரத்தை எடுக்க வேண்டும். எப்படி ஒரு வகுப்பறை முகாமைத்துவத்தை ஓர் ஆசிரியர் தெரிந்து வைத்திருக்க வேண்டுமோ, எப்படி வியாபார முகாமைத்துவத்தை ஒரு வர்த்தக நிறுவனம் தெரிந்து வைத்திருக்க வேண்டுமோ, அவ்வாறே காலத்தைச் செவ்வனே முகாமைத்துவம் செய்ய மனிதன் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

ஒரு நாளில் இருபத்திநான்கு மணித்தியாலம். சொந்த வேலைகள், வீட்டு வேலைகள், ஆறு மணித்தியாலயம். நாட்டுக்குச் சேவை செய்தல் என்று தீர்மானம் எடுக்கவேண்டும். பகலில் படுப்பதில்லை என்ற விரதம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

'வைகறை துயில் எழு' என்பது ஔவையார் ஆத்தி சூடி. நித்திரை அவசியம். அளவுக்கு மிஞ்சினால் கெடுதி. நித்திரை சண்டாளன் என்றும், நித்திரை சத்துராதி என்றும் இரு பழமொழிகளில் உள. நான் பிள்ளைகளுக்குச் சொல்வது அதிகாலை 4மணிக்கு எழும்புதல் உத்தமம். 5மணிக்கு எழும்புதல் மத்திமம். 6மணிக்கு எழும்புதல் அதமம். 7மணிக்கு எழும்புதல் பாவம்' – என்பார்.

அவ்வாறு கால முகாமைத்துவத்தை நன்கு தெரிந்து செயலிலும் காட்டியவர் காந்தி ஐயா.

உணவு விடயத்தில் மிகவும் கவனமாகவும், கட்டுப்பாடுடனும் வாழ்ந்தார். அவர் நீண்ட காலம் சுகமே வாழ்ந்தமைக்கு அவரது உணவுப் பழக்கமும் ஒரு காரணம். இதோ உணவுப் பழக்கம் பற்றி அவரே சொல்கிறார்:–

'1950 ஆம் ஆண்டளவில் கொச்சிக்காய் சாப்பிடுவது தற்கொலைக்குச் சமம் என்ற ஒரு பத்திரிகையில் படித்தேன். அன்றில் இருந்து கொச்சிக்காய் சாப்பிடுவதை தவிர்த்திக் கொண்டேன். நான் ஐந்து வருடம் சமைத்துச் சாப்பிட்டேன். அப்போது உப்பை நான் சேர்க்கவில்லை. தேவையான உப்புச்சத்து மரக்கறிகளில் இருக்கிறது. உப்பை ருசிக்காகவே சேர்க்கிறார்கள். எனக்கு ருசி தேவையில்லை. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்ற பழமொழியை நான் ஏற்பதில்லை. உப்பில்லா பண்டமும் உணவுக்காகும் என்று அப்பழமொழியை மாற்ற வேண்டும்.

சாப்பாட்டை ஒரு பிரச்சினையாக எடுக்க கூடாது. சாப்பாடு எளிமையாக, மலிவாக, சத்துள்ளதாக இருக்க வேண்டும். மூன்று நேர உணவு போதுமானது. தேநீர், சோடா, கோப்பி போன்றவை அவசியமில்லை. இவற்றால் பணச்செலவும் சுகக்குறைவும் ஏற்படும் 'பசித்தால் உண்க'என்பர்.

கால்நடையில் ஆர்வம் மிக்கார். 'நடப்பதில் எனக்கு நல்ல விருப்பம். ஒரு நாளைக்கு ஐந்து, பத்துமைல் நடவாத நாளில்லை. மூன்று முறை குடும்பமாகவும், இரண்டு முறை தனியாகவும் கதிர்காமம் நடந்து போயிருக்கிறேன். வவுனியாவில் இருந்து திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்குக் காவடி ஒன்றுடன் சேர்ந்து நடந்துள்ளேன். இதுவரை சுமார் ஒன்றே முக்கால் லட்சம் மைல்களை நடந்திருக்கின்றேன்.' இவ்வாறு கால்நடையில் அவருக்குள்ள ஆர்வத்தை விளக்குவார்.

வாழ்க்கையில் ஏழ்மை, தோல்வி, துன்பம் வந்தால் துவண்டு போகக் கூடாது. துணிவுடன் முகம் கொடுத்து முன்னேறுவதுதான் வாழ்க்கை என்று விளக்குவார். கஷ்டப்படுவருக்கு அவர் சொல்லும் ஆறுதல் மொழி கேளுங்கள்.

'கஷ்டங்களைக் கடவுளிடம் கேட்டுப் பெறவேண்டும். நல்ல குருநாதர் நம்மை வருத்துவது கொல்லவல்ல கொல்லவல்ல, பொல்லா வினைகள் போக்குவதற்கே என்பது ஆன்றோர் வாக்கு. மலையெனவரினும் தலையே சும என்பது பழமொழி. எதையும் தாங்கும் இதயம் வேண்டும். கவலைக்கு மருந்தில்லை. கவலையை மறந்து கவலைப்படாமல் இருப்பதுதான் மருந்து' .

### ஊருக்கு உழைத்த கர்மயோகி

ஊருக்கு உழைத்தல் யோகம் என்பர். அவ்வாறு ஊருக்கு அல்லும் பகலும் உழைத்து மறைந்த கர்மயோகி காந்தி ஐயா. காந்திஐயா, காந்தி மாஸ்டர், காந்தி ஆசிரியர் என்று அன்போடும் பண்போடும் பணிவோடும் மக்கள் அனைவரும் மதிக்கின்ற அன்னாரை நான் கர்மயோகியாகக் காண்கிறேன்.

முற்றும்.

## குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டது

இலங்கையின் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் மறு அறிவித்தல் வரை மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இன்று இரண்டாம் திகதி முதல் சேவைகள் நிறுத்தப்படுகின்றன என குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பரவுகின்றமையைத் தடுக்கும் நடவடிக்கையாகவே இவ்வாறு பத்தரமுல்லை பிரதான அலுவலகத்துக்கு பொது மக்கள் வருகை தருகின்றமை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

## வழிபாட்டுக்கு பிரதமர் மஹிந்த அழைப்பு!

கொரோனா தொற்று நிலைமைக்கு மத்தியில் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் ஆசீ வேண்டி, நாட்டின் அனைத்து விகாரைகளிலும் ரதன சூத்திரம் பாராயணம் செய்யுமாறும் நாடு முழுவதிலும் உள்ள இந்து ஆலயங்களில் விசேட பிரார்த்தனை வழிபாடுகளிலும் குறிப்பாக மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம் மற்றும் விசேட பிரார்த்தனைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மஹாசங்கத்தினரிடமும் இந்து ஆலய குருமார்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொரோனாத் தொற்று காரணமாக இதுவரை இலங்கை மாத்திரமன்றி முழு உலகமும் பாரிய நெருக்கடி நிலைக்கு முகங்கொடுத்துள்ளது.

இவ்வாறான சூழலில் கொரோனா வைரஸிலிருந்து விடுபட்டு உலக வாழ் மக்கள் அனைவரும் பாதுகாப்பாக வாழ்வதற்கு பிரார்த்தித்து, நாடளாவிய ரீதியில் பல்வேறு விகாரைகளில் ஏற்கனவே ரதன சூத்திரம் பாராயணம் செய்யப்பட்டு வருகிறது.

இந்த நெருக்கடி நிலைக்கு மத்தியில் நாட்டின் அனைத்து விகாரைகளிலும், தினமும் ரதன சூத்திரம் பாராயணம் செய்து, நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் ஆசிர்வாதமும், பாதுகாப்பும் கிடைப்பதற்கு பிரார்த்திக்குமாறு பிரதமர் மேலும் வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை –

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரதமரின் வழிகாட்டுதலின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால், இலங்கைத் திருநாட்டில் வாழுகின்ற மக்கள் அனைவரும், கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக, அருளாசி வேண்டி நாடு முழுவதிலும் உள்ள இந்து ஆலயங்களில் விசேட பிரார்த்தனை வழிபாடுகளில் ஈடுபடுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

விசேடமாக ஆலயங்களில் மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம் மற்றும் விசேட பிரார்த்தனை வழிபாடுகளைச் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இடம்பெறும் இந்த விசேட பிரார்த்தனை வழிபாடுகளைத் தினமும் காலை 6.30 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவையில் இடம்பெறும் 'ஆலய தரிசனம்' நிகழ்ச்சியில் ஒலிபரப்புச் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை விலக்களிப்பு இங்கு நீடிக்கும் பேரவலம்

## விசனம் தெரிவிக்கின்றது யாழ். ஊடக அமையம்

இன்று நவம்பர் 2 - ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்குத் தண்டனை விலக்கை ஒழிப்பதற்கான சர்வதேச தினம். அதையொட்டி யாழ்.ஊடக அமையம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:-

நடந்து முடிந்த ஊடகப் படுகொலைகள்,காணாமல் ஆக்கப்படுதல் உள்ளிட்ட ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதி வழங்கத் தயாரில்லாத ஒரு நாடாக இவ்வாண்டினையும் இலங்கை கடந்து செல்கின்றது.

இலங்கையின் ஊடகப்பரப்பில் கூடிய நெருக்கடிகளையும் மரணங்களையும் எதிர்கொண்ட தரப்பாக தமிழ் ஊடகத்தரப்பே இருந்து வருகின்றது.

ஆனாலும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதி வழங்காத அரசாக இலங்கை இருந்து வருவதால் பொறுப்பு கூறல் என்பதும் கண்டுகொள்ளப்படாமலேயே இருந்து வருகின்றது.

2000ஆம் ஆண்டில் பி.பி.ஸி. ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலையுடன் கட்ட விழ்த்து விடப்பட்ட தமிழ் ஊடகப்பரப்பின் மீதான ஊடகப் படுகொலை கலாச்சாரம் 39 இற்கும் அதிகமான ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்களைக் காவு கொண்டு நிற்கின்றது.

அதேவேளை நூற்றுக்கணக்கிலா ஊடகவியலாளர்கள் ஊடகப்பணியிலிருந்து விலகவும் நாட்டை விட்டு வெளியேறவும் இத்தகைய சூழலே காரணமாகியிருந்தது.

ஆனாலும் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு எதிரான ஒரு குற்றத்திற்குக் கூட நீதி வழங்கப்படாத வரலாற்றைக் இலங்கை கொண்டிருப்பதை யாழ்.ஊடக அமையம் பதிவு செய்ய விரும்புகின்றது.

இலங்கை சுதந்திர ஊடக இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது போன்று ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்போம் என்ற வாக்குறுதியுடன் ஆட்சிக்கு வந்த அரசு கடந்த ஆட்சியின் போது பல சம்பவங்கள் குறித்த விசாரணைகளை ஆரம்பித்திருந்தாலும், அவை மந்த கதியிலேயே நகர்கின்றன. முன்னாள் பிரதமர் ஒருவரோ விசாரணை செய்ய அதிகாரிகள் இல்லாதிருப்பதாக விளக்கமளித்திருந்தார்.

ஜனாதிபதி,பிரதமர் மற்றும் ஊடக அமைச்சரை சந்தித்து ஊடகப்படுகொலைகள் தொடர்பில் விசாரணைகளை வடக்கு,கிழக்கு ஊடகவியலாளர்கள் கோரியிருந்த போதும் அதிசயங்கள் ஏதும் நடந்திருக்கவில்லை.

நாட்டின் வரலாற்றில், ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்காகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் ஒரு சிலவே. அவற்றில் கிடப்பில் போடப்பட்டுள்ள தர்மரத்னம் சிவராம் கொலை தொடர்பான வழக்கு ஒன்றாகும். நிமலராஜன் கொலை தொடர்பிலான வழக்கிற்கும் என்ன நடந்ததென்பது தெரியாது.

மற்றையது பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன சம்பவம் தொடர்பான உயர் நீதிமன்ற வழக்கு.

பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன சம்பவத்தில் முக்கிய சந்தேக நபர் ஜனாதிபதி ஆணைக்குழு முன் ஆஜராகி, தான் இதற்கு முன் வழங்கிய சாட்சியம் நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்று கூறியுள்ளார். இவ்வாறு கூறியுள்ளதானது, வழக்கில் ஒரு பாதகமான திருப்பத்தை ஏற்படுத்தும் என்பதையே தெளிவாகக் காட்டுகிறது.

மறுபுறம் இப்போதிருப்பது ஊடகவியலாளர்களுக்கு எதிராக அதிக எண்ணிக்கையிலான குற்றங்கள் இடம்பெற்ற காலகட்டத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கம் ஆகும். இந்த நிலைமை நீதியான விசாரணைகள் இடம் பெறுமா என்ற கவலையை நீதிக்காக குரல் எழுப்பும் ஊடக சமூகத்தினரிடையே ஏற்படுத்தியுள்ளது.

ஒக்டோபர் 22 அம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசமைப்பின் 20 ஆவது திருத்தம், ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் சுயாதீனமாக நடத்தப்படுமா என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

20 ஆவது திருத்தத்தின்படி, இலங்கையின் அனைத்து உயர்நீதிமன்ற நீதியரசர்கள் மற்றும் உயர் காவல்துறை அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு நியமிக்கப்படும் காவல்துறை அதிகாரிகள் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்து இதற்கு முன் செய்யப்படாத வகையில் விசாரணைகளை மேற்கொள்வார்களா?, அத்தகைய நீதியரசர்கள் சுயாதீனமாக இருப்பார்களா? - என்ற கேள்விகள் இந்தக் கட்டத்தில் எழுந்துள்ளன.

ஏற்கனவே புதிய அரசின் ஊடக அமைச்சர் காணாமல் போனவர்கள் நாட்டை விட்டு தப்பி சென்று புலம்பெயர் தேசங்களில் இருக்கலாமென்ற வியாக்கியானத்தை செய்துள்ளார்.

இந்தப்பின்னணியில்தான், ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் நவம்பர் 2 ஆம் தேதி இலங்கையில் அனுஷ்டிக்கப்படுகிறது.

யார் ஆட்சியில் இருந்தாலும் ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குவது ஒவ்வொரு அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்பது உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதியாகும்.

மாறி,மாறி யார் ஆட்சியிலிருந்தாலும் நடந்தேறிய ஊடகப்படுகொலைகள் உள்ளிட்ட ஊடக அடக்குமுறைகளிற்கு எதிராக சர்வதேச ஊடக அமைப்புக்கள் முன்னிலையிலான விசாரணை என்பது முக்கிய கோரிக்கையாக யாழ்.ஊடக அமையத்தால் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாகப் புதிய அரசாங்கத்தையும் சர்வதேச ஊடகமைப்புக்களையும் யாழ்.ஊடக அமையம் 'நவம்பர் 2: ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை விலக்கை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தில்' மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றது. - இவ்வாறு யாழ்.ஊடக அமையத்தின் ஊடக வெளியீட்டு பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மக்களின் நலன்களினைப் பாதுகாக்கின்ற தனித்துவமான நாடாக இலங்கை இருக்கும்!

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை



மக்களின் நலன்களைப் பாதுகாக்கக்கூடிய வகையில், தனித்துவமான நாடாக இலங்கை இருக்கும் என்று கடற்தொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வவுனியாவுக்கு நேற்று விஜயம் செய்த அவர், வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரின் காரியாலத்தைத் திறந்துவைத்து விட்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தலைமையில் மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும், முன்னேற்றுவதற்கும் முழு முயற்சிகளை நாம் எடுப்போம். உலகளாவிய ரீதியில் இன்று பிரச்சினையாகவுள்ள கொரோனாத் தொற்றுநோய் இலங்கையையும் பாதித்திருந்தது.

அதன் முதற்கட்டத்தை நாம் வெற்றிகரமாக எதிர்கொண்டிருந்தோம். அந்த நம்பிக்கை மற்றும் அதன் பாதிப்புக்கள் குறைவடைந்தமையால் எமது மக்கள் கவனவீனமாக இருந்துவிட்டார்கள்.

எனினும் வருங்காலத்தில் விரைவான நடவடிக்கை எடுத்து இந்தத் தொற்றை நாம் நிச்சயம் கட்டுப்படுத்துவோம். அத்துடன் பாதிப்புகள் ஏற்பட்டவர்களுக்கு அதிலிருந்து மீண்டுவருவதற்கான திட்டங்களையும் முன்னெடுத்து நடைமுறைப்படுத்துவோம்.

அமெரிக்கா மற்றும் சீனாவின் ஆதிக்கம் இலங்கையின் இருப்பைக் கேள்விக்குட்படுத்துமா என்று ஊடகவியலாளர்கள் கேட்டமைக்கு, ஒவ்வொரு நாடுகளும் தமது நாட்டின் நலன்களை முன்னிறுத்தியே பல வேறு முடிவுகளை எடுப்பர். அதுபோல எமது நாட்டின் நலன்களை முன்னிறுத்தி அதனைப்பாதுகாத்தே எமது முடிவுகளை எடுப்போம். எங்களைப்போன்ற நாடுகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் உதவிகளை எதிர் பார்த்து இருக்கின்றன.

எனினும் எமது ஜனாதிபதியும்,பிரதமரும் கடந்த கால ஆட்சியாளர்கள் போல நடந்துகொள்ளாமல் மக்களின் நலன்களைப் பாதுகாக்ககூடிய வகையில், நாட்டின் தனித்துவத்தைப் பேணி உதவிகளை பெறும் நாடாக இலங்கை இருக்கும். - என்றார்


கல்யாணமாலை
வட. சர்வதேச திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1988.04.03 | பிறந்த திகதி - 1998.10.10 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - சித்திரை 4 | நட்சத்திரம் - அச்சுவினி |
| பாவம் - 11 | பாவம் - 28 |
| கல்வி - பட்டதாரி | கல்வி - பட்டதாரி |
| தொழில் - கனடா PR | எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச உத்தியோக மணமகன். |
| எதிர்பார்ப்பு - படித்த அழகான பெண். | |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள். முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம், சந்தை வீதி, இளையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528



தேவை

மில் ஒன்றினை நிறுவுவதற்கு தேவையான பாவித்த நல்ல நிலையில் உள்ள அரிசி, மிளகாய் ஆகியன திரிப்பதற்கான இயந்திரங்கள் தேவை.
விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்
0777323156
0763899554



விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1025/=Kg
• பிரான்ஸ் • ஜெர்மனி
• டென்மார்க்
• நெதர்லாந்து
• இத்தாலி
• சுவிஸ்
1150/= Kg
எமது நேரடிக்கிளைகள்
0768226240

லொக்டவுன் வந்தால் என்ன செய்வீர்கள்?
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
அமெரிக்க லொத்தர் விசா
இன்னும் 07 நாட்களே
2020ல் நீங்களும் அமெரிக்காவில்...
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
55'000
இந்த வருடம் A/L
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | சாவகச்சேரி | திருகோணமலை |
|---|---|---|---|---|
| 0768226243 | 0768226240 | 0776699892 | 0768226242 | 0768226237 |
| மானிப்பாய் | சுன்னாகம் | புதுக்குடியிருப்பு | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
| 0768226238 | 0764550670 | 0764550673 | 0768226230 | 0776697960 |

V2 Travels 0768226244


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

## கொரோனாவுக்குப் பின்னரான உலகம்
## இயற்கைக்கான தருணம்

# வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை 1-30, 2020



## ஆளுக்கொரு மரம் நடுவோம்
## நாளுக்கொரு வரம் பெறுவோம்

கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்